# சுடர்

கலை இலக்கியத்
திங்கள் இதழ்




ஆவணி 1982 விலை ரூபா 2.00

# வாசகர் வாய்மொழி

இலக்கிய ரசிகர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ள கலை இலக்கிய திங்கள் இதழான ஆடி 'சுடர்' சஞ்சிகையை வாங்கிய வேகத்திலே படித்து சுவைத்தேன். சஞ்சிகையில் இடம் பெற்ற அத்தனை அம்சங்களும் பாதுகாக்கவேண்டிய பொக்கிஷங்கள்.

சிவமணி மாணிக்கவாசகர், காரைநகர்.

* * *

ஆடிச் சுடர் ஆடி அசைந்து ஆறுதலாய் வராது நேரகாலத்தோடு வந்ததையிட்டு இரட்டிப்பு மகிழ்ச்சி. மேலும் ''பசுத் தோல் போர்த்திய புலி'' என்று பழமொழி இருக்க ஆசிரியத் தலையங்கத்தில் ''பசுத் தோல் போர்த்திய கரடி'' என எழுதி ''புலி''களுக்கு இழுக்கேற்படுத்தாமல் விட்டமைக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். பரிசுக் கதை தகுதியானதே. திரு. செ. குணரத்தினம் அவர்களைப்பற்றி முன்பு தெரிந்ததை விட இப்போது நன்கு தெரிந்துகொள்ள வாய்ப்பளித்தமைக்கு நன்றி. ஆவணி சுடரையும் விரைவில் எதிர் பார்க்கின்றேன்.

கெ. தர்மகுலராசா, நிலாவெளி.

* * *

''சிறுகதைத் தொகுப்பினிலே
சிந்தனைத்தமிழ் நீ
கவிதைகள் சிந்துவதில் கன்னித்தமிழ் நீ
கேள்வி பதில் சொல்வதில் தேன்தமிழ் நீ
அரட்டையடிப்பதில் அமிர்ததமிழ் நீ
காலபலன் கூறுவதில் காவியத்தமிழ் நீ
கவிச்சரங்கள் தொகுப்பதில் கலைத்தமிழ் நீ
வர்ணிக்க முடியாத வளமானதமிழ் நீ
ஈழத்தமிழரின் இதயச்சுடர் நீ''

எஸ். நாகராஜா, செக்கடிப்புலவு.

* * *

ஈழத்திலிருந்து வெளிவரும் நடுநிலைமையானதும் நவரசமானதும் எம்மினத்திற்குரியதுமான எழிலார்ந்த ஒரேயொரு திங்களிதழ் சுடர் ஒன்றே!

தாவடியில் நடந்த ஆய்வரங்கு பற்றி பலரும் கருத்திற்கொள்ள வேண்டியதொரு விடயம்.

சாதாரண நிலையிலிருந்து சற்றேனும் மாறுபட்ட நிகழ்வுகளையோ விடயங்களையோ கையாண்டால்தான் விமர்சனத்திற்கு உரியவராகலாம். அதற்காகதேவையற்ற விடயங்களைச் சந்திக்கிழுப்பது சிலருக்கு உதிரத்தோடு கலந்த நோயாகிவிட்டது. குட்டையைக் கலக்கி குதர்க்கத்தை விளைவித்து முட்டையிலே முள்ளொடிக்கும் 'பிரபல' என்ற மணியைக் கட்டிய ஒரு நல்ல எழுத்தாளரைப்பற்றி பச்சாதாபப்பட வேண்டியிருக்கின்றது.

ஈழத்தில் பெண் எழுத்தாளர்கள் வேகமாக பெருகி வருவது களிகொள்ள வேண்டியதொரு விடயம்தான். பெண்களில் தரமான எழுத்தாளர்கள் இல்லையென்று ஒரு நண்பர் கூறுகின்றார். இது மலையினின்று மலையைத் தேடுவது போலாகும்.

ஈழநிதி, வேலணை கிழக்கு.

* * *

'சிங்கள பல மண்டலய' கரடிகளை இனங்காட்டியதற்கு நன்றி. பண்பட்ட கவிஞர் குணரெத்தினத்தை அன்புமணி அன்பாய் மணி மணியான எழுத்தில் அறிமுகமாக்கிய அழகே அழகு! தமிழ்ப்பிரியாவின் பரிசுக் கதை முரண்பட்ட கோணத்திலானது. புதுமையானது. சம்மாந்துறை எம். எம். நௌஷாத்தின் பேச்சுமொழியும், கணபதி கணேசனின் அனுபவச் செழிப்பும் பாராட்டிற்குரியன. குட்டிச்செய்திகள் சில முட்டி மோதுகின்றன. கொஞ்சம் செக்ஸில் கவிதைகள் சுதந்திரத்திற்கு எழுச்சி பாடுகின்றன.

ஆர். இரத்தினகுமார், 72A மேற்செல்லை வீதி,
செங்கலடி.

* * *

பசுத்தோல் போர்த்திய கரடிகளை யாமும் தமிழ்மக்களும் இனம் கண்டு கொள்ள அறியத் தந்தமைக்கு நன்றிகள். தமிழ்த்தலைவர்களையும் இனம் கண்டு கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டமைக்கு எனது பாராட்டுக்கள். காலபலன் அபாரம், துணிச்சல் மிக்க அரியின் கேள்வி பதில்களுக்கு எனது சபாஷ். அரட்டை அருமையிலும் அருமை ஆற்றங்கரை அரசை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. என் அருமைச் சுடரே நீ நீடூழி வாழ்க!

த. சிவநாதன் பிரதான வீதி,
செட்டிகுளம்.

(இதன் தொடர்ச்சி 33 ம் பக்கம்)

வள்ளுவராண்டு: 2013 வெளியீடு:

சுடர்: 8 சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்

ஒளி: 5 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை

ஆவணி 1982 கொழும்பு—12.

**CHUDAR**

(கலை இலக்கியத் திங்களிதழ்)

தொடக்கம்: சித்திரை 1975 தொலைபேசி: 23411


# தனக்குத் தானே வெட்டும் குழி!

அரசியல் அமைப்புக்கு சில திருத்தங்களை கொண்டுவருவது மூலம் தமக்கு விழப் போகும் 'மரண அடி' யிலிருந்து தப்பித்துக் கொள்ள வழியமைக்கிறது ஐ. தே. க. அரசாங்கம்.

ஸ்ரீலங்காவில் எது நடந்தாலும் நமக்கென்ன என்று வாளாவிருந்துவிடலாம். ஆனால் ஸ்ரீலங்காவின் ஆட்சியதிகாரங்கள் நாம் விரும்பாமலே நம்மீது வலிந்து திணிக்கப்பட்டிருப்ப தால், அதன் படுபயங்கர நடவடிக்கைகளை உற்று நோக்க வேண்டியது அவசியமாகிறது.

பாராளுமன்ற நடைமுறைகளையே மாற்றியமைக்கக் கூடிய ஜனநாயக விரோத விதிகளை அரசியல் அமைப்பில் சேர்த்து, மக்களின் விருப்பத்துக்கு கடிவாளமிடும் அநாகரியச் செய லில் இறங்கியிருக்கிறார்கள். இது எத்தனை பெரிய கோணங்கித்தனமான அரசியல்.

உத்தேச திருத்தங்களின்படி—

குடியியல் உரிமைகளை இழந்தவர்களுடன் (திருமதி சிறிமாவுடன்) அரசியல் தொடர்புகள் வைத்துக்கொண்டால் அது ஒரு ஊழல் நடவடிக்கையாகி விடும், இது தொடர்பாக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ஒருவர் குற்றஞ்சாட்டி மனு தாக்கல் செய்தால் போதும், (அந்தக் குற்றச்சாட்டு உண்மையானதா பொய்யானதா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய கட்டாயம் இல்லாமலே) குறிப்பிட்ட கட்சிக்கு அந்த தேர்தல் மாவட்டத்தில் விழுந்த வாக்குகள் எவையும் கணக்கில் எடுக்கப்படமாட்டா.

இதே அடிப்படையில் தேர்தல் ஆட்சேபனை மனு ஒன்று தாக்கல் செய்யப்படும் பட்சத் தில் அந்தக்கட்சியில் இருந்து தரியப்படும் வேட்பாளர்கள் விசாரணை முடியும் வரை பாராளுமன்றத்துக்குச் செல்லமுடியாது.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு மாறலாம். ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சிக்கு மாறினால் பதவியை இழப்பர்.

ஜனாதிபதித் தேர்தல் குறிப்பிட்ட கால எல்லைக்கு முன் நடத்தப்படும். தெரிவு செய் யப்படும் ஜனாதிபதி தாம் விரும்பினால் முதல் வருட காலத்திலேயே இரு தடவைகள் பாராளுமன்றத்தைக் கலைக்கலாம்.

எவ்வளவு மகா பயங்கரமான ஷரத்துக்கள்.

ஐ. தே. க. வுக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பது மறைமுகமாக (சட்டத்தின் மூலம்) மக்கள் மீது திணிக்கப்படுகிறது. வேறு கட்சிகள் ஆட்சிக்கு வருவதை தடுக்க சட்டத் துணை தேடுவதோடு, தப்பித்தவறி மாற்றுக்கட்சி ஆட்சிக்கு வருமிடத்து பாராளுமன்றத்தை தன்னிச்சையாக கலைத்துவிடுவதற்கும் வழி அமைக்கப்போகிறார்கள்.

ஏதேச்சதிகாரமான போக்கில் ஆட்சியை வழி நடத்திச் சென்றவர்கள் அனைவருக்கும் வீழ்ச்சியே ஏற்பட்டுள்ளது என்பதைத்தான் அரசியல் வரலாறுகள் நமக்கு எடுத்துரைக் கின்றன.

தமக்கு சாதகமாக அமையும் என எதிர்பார்த்து கொண்டு வரும் திருத்தங்களே இவர் களுக்கு பாதகமாகவும் அமைந்து விடலாம். யாருக்கு ஜே. ஆர். குழி வெட்டுகிறாரோ அந்தக் குழிக்குள் அவரே விழப்போவதையும் நாம் பார்க்கலாம்.

சட்டத்தை பூப்பந்தாக எடுத்து விளையாடிய ஸ்ரீ நேருவின் புதல்வி திருமதி இந்திரா வுக்கே 1977ல் இந்திய மக்கள் பாடம் புகட்டியதை நாம் திரு. ஜே. ஆரின் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறோம்.

ரேபரேலி பாராளுமன்ற தொகுதியில் ஒரு சாதாரண ராஜ் நாராயணனால் இந்திரா அம்மையார் தோற்கடிக்கப்பட்டார். ஸ்ரீலங்கா ஜனாதிபதியை தோற்கடிக்கவும் ஒரு சாதாரண 'ராஜ் நாராயணன்' உருவாகுவார் என்பதை ஜே. ஆர். மறந்துவிடக்கூடாது.

# தமிழ்போதும் !

ஒட்டடை காற்றில் ஆடும் !
ஓடுமே, பல்லின் கூட்டம்
தட்டினுல் எங்கும் தூசி !
தனிமையி லிருக்கும் என்றன்,
மாளிகை இதுதான் ! ஆனுல்,
மனமது இதையே நாடும் !
வாழி நீ ! குடிசை யானுல்,
வளமெலாம் நிறைந்தாய், வாழி !

நிறைவுடன் கவிதை ஆக்கி,
நிலமிசை அளிக்கும் வாணர்
வறுமையில் வாடலென்ற
வாசகம் பொய்தானில்லை !
கவி - கலை வறியோர் சொந்தம் !
காசுதான் உள்ளோர் சொத்து !
புவியிலே இதுதான் உண்மை.
புகழுவேன் ! அறிவீர் மக்காள் !

படுக்கையில் மூட்டை குத்தும் !
பாவலன் ஓலைப் பாயில்,
கிடக்கையில் ஏதோஊரும் !
கிளுகிளுப் பூட்டும் யாவும் !
படக்கதை யாகும் ! வாழ்வைப்
பைந்தமிழ் அதனிற் பாடின்
கிடைக்குமா ? இதுபோல் வாழ்வு !
கலைஞரே ! இது என் சொர்க்கம் !

வான் மழை பெய்யும் காலை,
வறுமையும் சேர்ந்தே வாட்ட,
அன்புடன் மனையாள் வந்து
அருகினில் இருந்தே பார்க்க,
என் செய்வேன் ! விதியை மாற்றும்
இலக்கணம் அதுவும் கற்றேன் !
இன்தமிழ் நீ, என் சொத்து,
இதைவிடப் பிற ஏன் வேண்டும் ?

— அ. கௌரிதாசன் —

# கவிச்சரங்கள்

## அங்கும் இங்கும்

— ராம்ஜீ —

அங்கே-
'விடுதலைக்கீதம்'
ஒங்கிஒலிக்கும்
போதெல்லாம்-
இங்கே-
கொள்ளையர்-
புதையல் சேர்ப்பர்.

அங்கே
புலிகள் உறுமினால்
இங்கே-
சிங்கங்கள்
இரத்தம் குடிக்கும்.

அங்கே-
தமிழன்னை
அழுதால்......
இங்கே-
தமிழ்த்தங்கை-
கற்பிழப்பாள்.

அங்கே-
விடிந்தால்
நிச்சயமாய்
இங்கும் - ஒரு
'உதயம்' தெரியும்.

## 'வேதாந்தம்'

— எம். பிறேமப்பிரியா —

ஆடாத ஆட்டமெல்லாம்
ஆடி ஒய்ந்த பின் - இனி
ஆடிட முடியாதென்று
அறிந்த பின் பிறப்பது தான்!

## வறியநாடு

— மதி —

நம் நாடு
வறிய நாடு —
உண்மைதான் —
ஏனென்றால்......
''ஓட்டு''ப் பிச்சை
கேட்டுக்
கூட்டங் கூட்டமாய்
வருவார்களே !

## பணம்

—எஸ். கே. ராஜரெத்தினம்—

நேர, கால
வீரர்களின்
காவலை மீறி
நினைத்த இடத்தை
சென்றடைந்து
வறிய — செல்வ
ஜாதி, பேதங்களை
தகர்த்து — உறவாடி
பிரியும் உற்ற
நண்பன்.

## காலம்(ன்)

— முருகு —

நாங்கள்
கடத்துவது
காலம்!
ஆனால் —
எங்களைக்
கடத்துவதோ
காலன்!

## பெண்ணாய்ப் பிறந்ததினால்...

-பன்விலை சாந்தாமணாளன்-

கற்பூரமாயிருந்தால்
காற்றில்
கரைந்திருப்பேன்...... !
சக்கரையாயிருந்தால்
நீரிலே
கலந்திருப்பேன் !
மெழுகாய் இருந்திருந்தால்
தீயில்
உருகி நான்
போயிருப்பேன் !
பனித்துளியாய்ப்
படிந்திருந்தால்
ஆவியாய்
மறைந்திருப்பேன் !
அந்தோ.....!
பெண்ணாய்ப்
பிறந்துவிட்டேன்
இன்று
பெருந்துயரில்
மூழ்கிவிட்டேன்...!

## விடிவு எப்போ...?

— குமார் தனபால் —

கிட்டியடி
கிளித்தட்டுப்போய்
''கிறிக்கற்மச்'' வந்தது !
சோட்டி கிமோனா போய்
மக்ஸியும் வந்தது !
கைவண்டி
கால்வண்டி போய்
''கொண்டா யமகா'' வந்தது!
விஷமாக ஏறும்
விலைவாசி போய்
விடிவு காலம்
எப்போ வரும்......?

ஒரு நரிக்குறத்தி குறி சொல்கிருள்:

# காலபலன்கள்

## — சிம்மம் —

### லொக்கு பண்டாரர:

மிதுனத்தில் கேது நிலை பெற்றிருப்பதால் உமது மனத்திலும் கெட்ட நினைவுகளே உதயமாகிக் கொண்டிருக்கும். தமிழர்கள் எப்படி பண்டார வன்னியனுக்கு சிலை எழுப்ப முடியும்? எனது பெயரிலும் 'பண்டார' என்ற நாமம் ஒட்டிக் கொண்டிருக்கிறதே. எனவே 'வீர வன்னி பண்டார' ஒரு சிங்களவரே என அடிக்கடி கனவுகளில் பிதற்றவேண்டி நேரிடும். இனவாத வாந்திகளும், லொக்கு, லொக்கு எனக்கப் பார்க்கும் மிகக் கவனம். அரசியலில் தவளையாகும் காலம் நெருங்கிக் கொண்டிருப்பதாலும் அப்புத்தளை மக்கள் தலையில் குட்டி புத்தி புகட்டவிருப்பதாலும் புதிய புகலிடம் தேட வேண்டியது அவசியமாகும். ஏதாவது ஒரு சித்திவிநாயகர் ஆலயம் சென்று 'கண தெய்யோ' விற்கு அர்ச்சனை பண்ணி ஆயிரம் முறைகள் தோப்புக் கரணம் போட்டு தலையிலும் பல தடவைகள் குட்டிக் கொள்க!

### ஹெக்டர் கொப்பேகடுவ:

பத்தாம் இடத்தில் சந்திரன் நேரான பார்வை பார்த்துக் கொண்டிருப்பதால், கனவிலும் நனவிலும் ஜனுதிபதி பதவி ஆசை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டேயிருக்கும். எப்படித்தான் முயன்ருலும் அது எட்டாத இடத்துக்கே உம்மை இட்டுச் செல்லும். ஒரு காலத்தில் 'தொண்டமானைத் தூக்கி கடலுக்கு அப்பால் வீசுவோம்' என வீருப்பு பேசினீர். அதனைத் தொடர்ந்து உமக்கு ஏற்பட்டவைகள் அனைத்தும் சோதனை, இனியாவது சுய புத்தியோடு நடந்து கொள்க. பூர்வ ஜென்மத்தில் நீர் செய்த புண்ணியத்தால்தான் ஜனுதிபதி ஆணைக்குழு விசாரணையால் நீர் பாதிக்கப்படவில்லை. அரசியலில் மீண்டும் செல்வாக்கு பெற வேண்டுமானுல் கதிர்காமக் கந்தனுக்கு அரோ ஹரா கோஷம் போட்டு நூற்றி எட்டு முறை வலம் வருவதோடு அநுராவுக்கும் அடிக்கடி அன்னக் காவடி எடுக்க மறக்கக் கூடாது.

### பரித் மீராலெப்பை:

ஐயோ நானு! உமக்கு எட்டாம் இடத்தில் சனி பார்வை இருப்பதால் நாய் படாப் பாடு படவேண்டிய நிலை தோன்றியுள்ளது. பாராளுமன்ற தேர்தலை நினைக்கும் போதெல்லாம் உடலில் ஒருவித சூடு பரவி வயிற்றுக் கலக்கம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். மட்டக்களப்பு மாவட்ட ஐ. தே. க. தேர்தல் பட்டியலில் திரு. கே. டபிள்யு. தேவநாயகமே முதன்மை வேட்பாளராக இடம் பெறவிருப்பதால் நெஞ்செரிவுகளும் அடிக்கடி ஏற்பட்டு அதனுல் தலைச்சுற்றும் மயக்கமும் ஏற்படலாம். எந்த வைத்தியரை நாடியும் பயன் ஏதும் ஏற்படாது. காத்தான்குடி பெரிய பள்ளிவாசலில் ஐங்காலத் தொழுகைகளையும் அமைதியாக நடத்தி 'லா இலா ஹா இல்லல்லாஹு' என்ற கலிமாவை இதய சுத்தியுடன் 3 முறை ஓதி வந்தால் இந்த வயிற்றுழைவு நெஞ்செரிவுகள் எல்லாம் மாயமாகும் சாத்தியங்கள் காணப்படுகின்றன.

### குமார் பொன்னம்பலம்:

கும்பத்தில் சூரியனும் கன்னியில் கேதுவும் சஞ்சரிப்பதால் அரசியலில் மந்தப்புத்தியே இருந்து வரும். அவசரப்பட்டு ஆத்திரத்தில் சுயநினைவிழக்காமல் தொடர்ந்தும் 'சிவா' பக்தனுகவே இருந்துவந்திருந்தால் எம். பி. பதவி உம்மை நாடியே வந்திருக்கும். சுத்த மக்குத்தனத்தால் அப்பன் பேரையே கெடுத்துக்கொண்டீர். பதவிப்பித்து தலைக்கேறி விட்டதால் எட்டாத பதவிக்கெல்லாம் கொட்டாவி விடுகிறீர். ஜனுதிபதி தேர்தலிலும் குதிக்கும் எண்ணம் உமக்குண்டு என்பதைதத்தான் சொல்கிறேன். இந்த ஆசையை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுதல் நன்று.

அமிர்தலிங்கேஸ்வரரை சாஸ்டாங்க நமஸ்காரம் பண்ணி, 'சிவா' பூஜை செய்து வந்தால் ஒழிய எண்ணிய காரியம் எதுவும் நிறைவேருது. காலங் கடத்தாமல் காரியத்தில் இறங்குக!.

# அரட்டை

சடுதிப்பென யாரும் எதிர்பார்க்காத வகையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறப் போகிறது. இத்தேர்தலுக்கான அபேட்சகர் தெரிவில் ஐ. தே. க. வைப் பொறுத்த வரையில் எவ்வித சிக்கலும் இல்லை. மக்கள் விடுதலை முன்னணி அதன் தலைவர் திரு. ரோஹண விஜேவீரவை ஜனாதிபதி அபேட்சகராக அலங்கரித்து வருகிறது. இலங்கை கம்யூனிஸ்ட் (மாஸ்கோ) கட்சி திரு. பீட்டர் கெனமனை தேர்தல் வீரனாக களத்தில் விடத்தயாராக்கி வருகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மைத்திரி பிரிவின் அபேட்சகர், அதன் கதாநாயகன் திரு. மைத்திரியே என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிறிமா பிரிவின் அபேட்சகர் யார்?

திரு. ஹெக்டர் கொப்பேகடுவ தன்னையே நிறுத்த வேண்டும் என ஒற்றைக்கால் கொக்காக நின்று கொட்டாவி விடுகிறாராம். இவருக்கு பக்கபலமாக நடிகர் விஜே குமாரதுங்க (சிறிமாவின் மருமகன்) கோஷ்டியினரும், எதிராக அனுரா கோஷ்டியும் அணி வகுத்து நிற்பதாக தெரிகிறது. இந்த இழுபறிக்கு முற்றுப்புள்ளி வைக்குமுகமாக பொதுவான ஒரு அபேட்சகரை தெரிவு செய்வதிலேயே ஸ்ரீமா அம்மையாரின் கவனம் செல்கிறதாம். அந்த பொதுவான அபேட்சகர் முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவராகவோ, அன்றி கொல்வின் ஆர். டி சில்வாவாகவோ இருக்கலாம் என அரசியல் வட்டாரங்களில் கிசுகிசுக்கப்படுகிறது.

* * *

திரு. மைத்திரிபால சேனநாயக்காவுக்கு இப்போது புதிய உற்சாகமும் உத்வேகமும் ஏற்பட்டுள்ளது. மும்மூர்த்திகளைக் கொண்ட தனது கட்சிக்கே உண்மையான சுதந்திரக் கட்சி என பாராளுமன்ற தெரிவுக் குழு நற்சாட்சிப் பத்திரம் வழங்கியிருப்பதே இதற்கு காரணமாகும். இதை வைத்து தேர்தல் ஆணையாளரும் தனது கட்சிக்கே அங்கீகாரம் வழங்குவார் என்பது திரு. மைத்திரியின் எதிர்பார்ப்பு. அப்படி வழங்கப் பட்டால் சிறிமா அணியினர் இதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம். தீர்ப்பு வரும்வரை இரு பகுதியினருமே 'கை' சின்னத்தில் போட்டியிட முடியாத சூழ் நிலை ஏற்படப்போகிறது. இந்நிலையில் திரு. தினேஷ் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியின் சக்கர சின்னத்தில் தமது வேட்பாளரை போட்டிக்கு நிறுத்துவதென சிறிமா அணியினர் இரகசிய முடிவெடுத்துள்ளதாக தெரிகிறது. மைத்திரி கோஷ்டியின் முடிவு என்னவோ? யாமறியோம்.

* * *

முன்பெல்லாம் தலைநகரில் என்ன விழா நடந்தாலும் அது எம். ஜி. ஆர். ரசிகர் மன்றக் கூட்டமாக இருந்தாலும் சரி, சிவாஜி ரசிகர் மன்றகூட்டமாகஇருந்தாலும்சரி, அங்கெல்லாம் கதாநாயகனாக வீற்றிருப்பவர் திரு. எம். எஸ். செல்லச்சாமி அவர்களே. அந்த அளவுக்கு அவர் மிக மலிவான அரசியல் வாதியாக இருந்து வந்தார். இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. தற்போது கோயிற் திருவிழா என்றாலும் சரி, நடன நாடக அரங்கேற்றம் என்றாலும் சரி முன்னணியில் இருப்பவர் அமைச்சர் செ. இராசதுரை அவர்களே. அதற்கடுத்ததாக இருப்பவர் கொழும்பு மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. நோபல் வேதநாயகம். மலிந்த சரக்குகள் சந்தைக்கு வருவது இயற்கைதானே.

* * *

மக்கள் விடுதலை முன்னணியினரின் அதிவேக வளர்ச்சி ஐ. தே. க.வுக்கு கதிகலக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக முன்பொரு தடவை குறிப்பிட்டிருந்தோம். அது உண்மைதான் என்று இப்போது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. விரைவில் அரசியலமைப்புக்கு கொண்டுவரபடவிருக்கும் சில திருத்தங்களோடு, பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்திராத ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாத வாறும் ஒரு புதிய திருத்தத்தை கொண்டுவந்து நிறைவேற்ற முஸ்தீபுகள் நடைபெற்று வருகின்றனவாம்.

அதன்மூலம் மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் திரு. ரோகண விஜேவீரவையும் ஜனாதிபதி தேர்தலில் போட்டிக்கு நிற்க இயலாதவாறு முடமாக்கப் பார்க்கிறார்கள். ஸ்ரீலங்காவின் அரசியலமைப்பு இன்னும் எப்படியெல்லாம் படாத பாடுபடப் போகிறதோ? இது என்ன ஜனநாயகம்!

* * *

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (சிறிமா) தனது ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில், தமிழர் பிரச்சினைகள் நிரந்தரமாக தீர்த்து வைக்கப்படும் என அறிக்கைவிடப் போகிறதாம். தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக ஸ்ரீலங்காவின் அரசியல் கட்சிகள் எல்லாம் 'சுயாட்சி' என்ற இரையை தமது தூண்டிலில் கொழுவிக் காட்டிக்கொண்டிருப்பது மிக வேடிக்கையான அரசியல் ஆகும். அண்மையில்தான் திரு. கொப்பேகடுவ மாத்தளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இனவாதப் பேச்சு பேசியிருக்கிறார். இவரின் கட்சியும் தமிழருக்கு சுயாட்சி வழங்கப் போகிறதாம். ஹஹ்ஹஹ்ஹா!

# அரி பதில்கள்

**மா. கிருபானந்தன்**
"குமரகோட்டம்"
மல்லாகம்.

**கே:** தமிழீழ இலட்சியத்தை தியாகம் செய்த த. வி. கூட்டணியினருக்கும் தியாகிகள் வரிசையில் சிலை எழுப்ப வேண்டுமா?

**ப:** தமிழீழ இலட்சியத்தை த. வி. கூட்டணி இன்னும் தியாகம் செய்துவிடவில்லை. பணநெருக்கடி ஏற்படும் போது தங்க நகைகளை நாம் அடவு வைப்பதில்லையா? அதுபோல் அவ்வப்போது அரசியல் நெருக்கடிகள் நெருடும் வேளைகளில் தமிழீழ போராட்டங்களும் தற்காலிகமாக அடவு வைக்கப்படுகின்றன. அவ்வளவுதான்.

**மி. அருள்மொழிராஜா**
நிலாவெளி-3

**கே:** அண்மையில் படுகொலைசெய்யப்பட்ட, இறைகுமாரன் உமைகுமாரன் இருவரினுடைய இழப்புபற்றி......?

**ப:** தமிழீழப் போராளிகளின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்புகள்!

**கே:** "சுடர்" மாதமிருமுறை வராதா என வாசகர்களாகிய நாம் ஏங்கிக் கொண்டிருக்கும் போது இரு மாதங்களுக்கொன்ருகச் சுருக்குவதன் முக்கிய காரணம் என்ன?

**ப:** தவிர்க்க முடியாத தாமதிப்புகளால் தான் இரு இதழ்களும் ஒன்ருக இணைகின்றன. இத்தவறுகள் இனிமேல் இடம் பெருது தவிர்க்க முயற்சிப்போம்.

**கே:** ஆயுதப்போராட்டத்தில் எமக்கு விமோசனம் கிடைக்காது. என்று தலைவர் "அமிர்" கூறுவதை நீர் ஆமோதிக்கின்றீரா?

**ப:** ஆம்! மக்கள் எழுச்சி பெற்ருல் ஆயுதம் எதற்கு? ஆயுதம் ஏந்தி இரத்தம் சிந்தாமலேயே அஹிம்சைப் போர் மூலம் விடுதலை பெற முடியும். ஆனுல் அதற்குக் கூட நம் தலைவர்கள் இன்னும் தயாராகவில்லையே. அதுதான் கவலை தருகிறது.

**அ. தயாபரி**
கொக்குவில் மேற்கு
கொக்குவில்.

**கே:** எதிர்வரப் போகும் தேர்தலில் சிறிமா அம்மையாரின் கட்சி ஆளும் கட்சியாக வந்து விட்டால் தமிழர் நம் நிலைமை எவ்வாறு அமையும்?

**ப:** எவ்வித மாற்றமுமின்றி இவ்விதமே அமையும். சந்தேகம் வேண்டாம்தயாபரி!

**கே:** உண்மையிலே தந்தை செல்வாவின் வழியில் செல்லும் ஒரு கூட்டணி எம். பி. யின் நாமத்தை கூறுங்கள்?

**ப:** சற்றுப் பொறுங்கள் யோசித்து விட்டு மிக ஆறுதலாக பதில் தருகிறேன்.

**எஸ். நாகராஜா**
செக்கடிப்புலவு
வவுனியா

**கே:** தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் கதைகளில் ஆங்கில சொற்களை புகுத்துவது நல்லதாக இல்லை என்பது என் அபிப்பிராயம். உங்கள் எண்ணம் என்னவோ......?

**ப:** அடியேனின் எண்ணமும் அதுவே. இதற்காக தமிழ் நாடு சென்று அண்ணுவின் சிலையருகே அமர்ந்து இருவரும் உண்ணுவிரதம் இருப்போமா?

**கே:** திருமலை மாவட்டத்துடன் அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சில இடங்களை ஸ்ரீ லங்கா அரசு இணைத்திருப்பது எதிர்வரும் தேர்தலில் தாம் வெற்றியிட்டுவதற்குத்தானே......?

**ப:** தேர்தல் வெற்றி மட்டும் குறிக்கோள் அல்ல; திருக்கோணமலை மாவட்டத்தை முக்கால்வாசி சிங்கள மாவட்டமாக்குவதே ஸ்ரீலங்கா அரசின் இலட்சியமும் ஆகும்.

**எம். சிவலிங்கம்**
'செல்வ பவனம்,'
தங்கோடை,
காரைநகர்.

**கே:** அரசாங்கத்திற்கு (ஐ. தே. க) ஆலவட்டம் பிடிக்கும் நாளேடுகள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**ப:** சாகப்போகும் ஐ. தே க வின் பிணத்தை சுமக்கப் போகும் 'பாடைகள்'.

**கே!** ஐ. தே. கட்சி சிங்கள அமைச்சர்கள் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு விஜயம் செய்யும் போது அவர்கள் எமக்கு செய்த அட்டூழியங்களையும் மறந்து வரவேற்கின்ருர்களே. இப்படிப்பட்டவர்களை நாம் எப்படி அழைக்கலாம்?

**ப:** 'அரசியல் ஓணன்கள்' என அழைக்கலாமே! இவர்கள் காலத்துக்குக் காலம் பச்சை, நீலம், சிவப்பு என தம்நிறத்தை மாற்றும் அதி சக்தி படைத்தவர்கள்.

**கே:** க. பொ. த. உயர்தர பரீட்சையில் கூடிய புள்ளிகளை தமிழ் மாணவர்கள் பெற்றிருந்தாலும், பல்கலைக்கழக அனுமதி தர மறுப்பதேன்?

**ப:** எத்தனை புள்ளிகள் தான் எடுத்தாலும் அவர்கள் 'சீனுப் புள்ளி' அல்லவே. அதனுல்தான்.

**ஓர் அனுமதேயம்**
(பெயர் குறிப்பிடப்படவில்லை)

**கே:** அண்ணு! சென்ற பொதுத் தேர்தலில் நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருந்தோம். மற்றவர்கள் கண்டு வியந்தார்கள், பயந்தார்கள் ஆனுல் இப்போது பலரும் பல திசையில் நிற்கின்ருர்களே எமது இலட்சியம் வெற்றிபெற இவர்கள் ஒன்று பட மாட்டார்களா?

**ப:** உங்கள் அவா விரைவில் நிறைவேறலாம். குடும்பச் சச்சரவுகள் குடிகெடுக்குமளவுக்கு வளரவே முடியாது.

**கே:** தமிழர்களிடையே பதவி ஆசை பிடித்தவர்களையும் பிரதேச வெறிபிடித்தவர்களையும் என்ன செய்வது?

**ப:** முக்காடு போடவைத்து மூலையில் உட்கார வையுங்கள்!

**கலைராஜன்**
வவுனிநகர்.

**கே:** இத்தாலிய விமானம் ஒன்றை சிங்களவர் கடத்தி விட்டார் என்றதும் ஸ்ரீலங்காவினர் வானொலியிலும் பத்திரிகையிலும் தம்பட்டம் அடித்தார்களே. அவர் ஒரு தமிழராக இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்கள்.....?

**ப:** 'கொட்டியா, கொட்டியா' (புலி, புலி) என்று ஆத்திரத்தை கொட்டித் தீர்த்திருப்பார்கள். நமது தலைவர்களோ 'விமானக்கடத்தல்கள் மூலம் விடுதலை காண முடியாது' என எல்லோரையும் முந்திக்கொண்டு அறிக்கை விட்டிருப்பார்கள்.

**த. சிவநாதன்,**
பிரதான வீதி,
செட்டிக்குளம்.

**கே:** தமிழனிடையே இருக்கும் தன்னையே அழிக்கும் கொள்கையும், உயர் ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற கொள்கையும் மாறி எல்லோரும் ஒரே இனம் ஒரே ஜாதி என்ற நிலை எப்போ மாறி வரும்?

**ப:** சுதந்திர தமிழீழம் மலர்ந்த பின்.

> தென்னுபிரிக்காவை சேர்ந்த ஸ்வாஸிலாந்தின் அரசரான 72 வயதான சொபூஸாவுக்கு உத்தியோகபூர்வ மனைவிகளாக 60 பேர் இருக்கிருர்கள். இது தவிர எண்ணற்ற பெண்களையும் துணைவியர்களாக அவர் வைத்திருக்கிருராம்.

**கனக பிரதீபன்,**
கேணியடி,
கொக்குவில் மேற்கு.

**கே:** அரி அவர்களே உங்களை நேரில் சந்திக்க விரும்புகின்றேன். முடியுமா?

**ப:** சே! அதெப்படி முடியும்? நான் சந்திர மண்டலத்திலல்லவா குடியிருக்கிறேன். அமெரிக்காவுக்கு சென்று அங்கிருந்து 'அப்பலோ' ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு வந்து சேருங்கள். என்ன கேள்வி இது கனக பிரதீபா, எமது அலுவலகம் வந்தால் தாராளமாக சந்திக்கலாமே!

**கே:** எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தானே நாட்டின் தலைவன் என்று தார்மீக தலைவர் பிதற்றுகின்ருரே. இதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

**ப:** நீங்கள்தான் சொல்லி விட்டீர்களே, பிதற்றுகிருர் என்று அப்புறம் நான் என்ன சொல்வது?

**கே:** சுடர் நண்பர் வட்டத்தை பார்த்து பல நண்பர்களுக்கு கடிதம் வரைந்தாலும் பதிலே தருகிருர்கள் இல்லையே இவர்களைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

**ப:** நீங்கள் எழுதியது நண்பர்களுக்கா அன்றி நண்பிகளுக்கா? பாவம், விட்டு விடுங்கள் அந்த 'எழுதாமடந்தை'களை.

**சிவமணி மாணிக்கவாசகர்,**
தங்கோடை,
காரைநகர்.

**கே:** இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இருட்டடிப்பு செய்து வைக்கும் செய்திகளை 'வெரிதாஸ் தமிழ்ப்பணி' ஒலிபரப்பி வருகின்றதே. வெரிதாஸ் தமிழ்ப்பணி பற்றி சில வரிகள் கூறுவீர்களா? அரி அண்ணு.

**ப:** 'வெரித்தாஸ்' தமிழ்ப் பணியினருக்கு 'வெரிதாங்ஸ்'!

**கே:** எமது ஊரிலிருப்பவர்கள் சிலரிடம் 'ஈழம்' என்ற பேச்சை எடுத்தவுடன் அவர்கள் எம்முடன் வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு வருகிருர்களே இவர்களைப்பற்றி சில வரிகள் கூறுங்கள் பார்க்கலாம்

**ப:** வேழமுகத்தோர்கள்! - (வேழம் என்ருல் யானை!)- புரிகிறது தானே!.

**கே:** சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிறிமா அணியும், மைத்திரி அணியும் ஒரே அணியாக இணைவதாக கனவு கண்டேன். கனவு பலிக்குமா?

**ப:** இல்லை. அது பகற்கனவு.

**கே;** நம் சமுதாயத்தில் அதிகமான இளைஞர்கள் லட்சக்கணக்கில் சீதனம் தந்தால் தான் திருமணம் செய்வேனென்று கூறுகிருர்களே. இளைஞர்களுக்கு அரி அண்ணுவின் அட்வைஸ் என்ன?

**ப:** பணத்துக்காக தம்மை விலை பேசித் திரிவது மிகப் பெரிய அவமானம். பண்டைய காலத்தில் காளைகளை அடக்கி கன்னியரின் கரம் பற்றிய வீர மரபு வழித்தோன்றல்கள் இன்று காசுக்குள் அடங்குவது எத்துணை கோழைத்தனம்.

பண்டைய இலக்கியக் காட்சி :

# மூன்றுவது கால் ஈழத்தின் மீது!

எஸ். பி. கிருஷ்ணன்

படைகள் புடை சூழ்ந்தன. கிள்ளியின் கண்களில் பொறிகள் பறந்தன. கிள்ளி உறையிலிருந்த வாளைக் கையிலெடுத்தான். யானை மீதமர்ந்தான்.

அவன் களத்திலே துள்ளி விளையாடும் காளை. வில்லில் வல்லவன் சோர்வற்றவன். சொல்லும் செயலும் ஒன்றே கண்டவன். காவிரித்தாய் பெற்றெடுத்த பைந்தமிழ்ச் செல்வன் வளவனின். பரம்பரை கரிகாலன் தம்பி !

உரிமை முழக்கம் — முரசம் முழங்கியது காஞ்சி எங்கே? வளம் மிக்க தஞ்சை எங்கே? எனக்கேட்பது போன்று முரசம் அதிர்ந்தது. யானையின் முழக்கம் கேட்டு வீரர்கள் திரும்பினர்.

யானை கிள்ளியைப் பணிந்து சொன்னது—

மன்னவா ! இதோ என் ஒரு கால் காஞ்சியிலே பதிந்து விட்டது. மற்றொரு கால் தஞ்சையிலே வைத்து விட்டேன். சிங்கள நாட்டவர் சிறுமதியடக்க, இன்பத் தமிழரின் வீரத்தை விளக்கும் வகையில் ஈழத்தின் மீது மூன்றுவது காலும் பதிந்து விட்டது. இப்போது ஒரு கால் பாக்கி. உறையூர்க் கோமானின் உல்லாசவாசி என்பதைக் காட்ட இந்த நான்காவது கால் என்பது போல யானை மன்னனை நோக்கி கால்களைத் தூக்கிய படி நிற்கிறது. கிள்ளி வளவன் அதைத் தட்டிக் கொடுத்து மகிழ்கிறுன்.

கிள்ளி என்றதுமே வாளும் வேலும் துள்ளி விளையாடும். சென்றுன், வென்றுன், மீண்டு வந்தான். வாகைமாலை சூடினுன் என்பன கிள்ளியைப் பற்றி வரலாறு சொல்லும் கதைகள். யானைக்கே இந்த வீரமென்ருல் மறவரைப் பேசவா வேண்டும்.

செந்தமிழர் வாழ்வில் காதலும் வீரமும் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்ததை தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. அவற்றுள் முத்தான படைப்பு முத்தொள்ளாயிரம் இத்தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டதுதான் இக் காட்சி.

பாடல் இதோ !

கச்சி ஒரு கால் மிதியா, ஒரு காலால்
தத்து நீர்த் தண் தஞ்சை தான் மிதியாய்-
பிற்றையும்
ஈழம் ஒரு கால் மிதியா வருமே, நம்
கோழியர் கோக் கிள்ளி களிறு.

---

( அரி பதில்கள் தொடர்ச்சி... )

S. கௌரி
அளவையூர்.

**கே:** தமிழ் மக்களைப் பொறுத்தவரை இன்றைய அரசின் கொள்கை என்ன? கூட்டணியின் கொள்கை என்ன?

**ப:** கொஞ்சம் பொறுத்திருங்கள். தேர்தல் வருகிறது. அவர்களே விளக்குவார்கள்.

**கே:** தமிழர்களிடையே பரவியுள்ள சாதிப் பிரச்சனையை சகல வழிகளிலும் தீர்க்க முயன்று கூட தோல்வியே. இன்னும் குறையும் நோக்கத்தைக் காணேம். இனி இதனை எப்படி ஒழிக்க முடியும்?

**ப:** புரையோடி பரவிப் போயிருக்கும் இ நோயை மெல்ல மெல்லத்தான் அகற்ற முடியும். பொறுத்திருங்கள் விரைவில் குணமாகும்.

**கே:** சில ஆண்கள் காதலிக்கும் போது 'சீதனம் வாங்குவதேயில்லை' என எழுத்துக்கள் மூலமும் பேச்சுக்கள் மூலமும் கூறிவிட்டு, திருமனப் பேச்சின் போது சீதனம் இத்தனை இத்தனை தரவேண்டும் என வாய்விட்டே கேட்பவர்களை எப்படிக் கூறிஞல் பொருந்தும்?

**ப:** மண்டையைப் போட்டுக் குழப்பியும் பதில்தர முடியவில்லை. எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதனிடம் எழுதிக் கேளுங்கள். அவர் ஒருவரால் தான் இதற்கு பதில் தரமுடியும்.

ஆ. இராமச்சந்திரன்.
தெகிவளை.

**கே:** இந்நாட்டிலுள்ள மிக மலிவான பொருள்கள் சில வற்றைக் கூறுங்கள் பார்க்கலாம்?

**ப:** காட்டிலும் மேட்டிலும் ரோட்டிலும் மலிந்து போய் கிடப்பவை பச்சைக் கொடிகளும், ஐ. தே. க தலைகளின் சுவரொட்டிகளுமே. மலசல கூடச் சுவர்களைக் கூட இவை விட்டுவைக்க வில்லையே.




## கவிதாயுதம்

மகா கவி பாரதியின் நூற்றாண்டில் சமகால கவித்துறையின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பு செய்ய வேண்டும் என்ற அவாவின் விளைவே இதுவாகும்! மரபுக் கவிதைகள், புதிய வீச்சும் அழகும் பொருந்திய புதுக்கவிதைகள், ஆகியவற்றின் செழுமையை வளர்த்தல், கவிதை நூல்களை வெளியிடல், வெளிவரும் நூல்களுக்கு ஆதரவளித்தல் என்றவாறே மண்டலத்தின் செயற்பாடுகள் அமையும். ஆர்வமுள்ள கவிஞர்களை எழுதத் தூண்டுதல், அவற்றைப் பெற்று ஆய்வு செய்தல், சிறந்தவற்றைத் தேர்ந்து பிரசுரவாய்ப்பினை ஏற்படுத்துதல், என்பன முதன்மைச் செயற்பாடாக மாதாந்தம் அமையும். மாதாந்த தேர்வுக்கான உங்கள் கவிதைகளை; கவிதாயுதம் 8/2 சிவன் கோவில் தெற்கு வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு! அனுப்பி வைக்குமாறு கேட்கின்றோம்

## தமிழ்ப்பிரியா

பெண் பிரம்மாக்களிடையே கணிசமானளவு கதை படைத்து 'ஜெட்' வேக எழுத்தாளர் எனப் பெயர் பெற்ற தமிழ்ப்பிரியா சுடரில் பிரசுரமான 'தனிமலர்' சிறுகதை மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர். ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும் தன் புகழ் நாட்டிய தமிழ்ப்பிரியா வாசகர்களுக்கு மட்டுமல்லாது சகல வானொலி நேயர்களுக்கும் நன்கு அறிமுகமானவர். இவரது கதை நடை தமிழகத்தின் தரமான பெண் எழுத்தாளர்களது நடைக்கு ஒப்பானது என ஈழத்தின் பிரபல நாவலாசிரியர் ஒருவர் தமிழ்ப்பிரியாவின் கதைகள் பற்றி குறிப்பிடுகையில் கூறியுள்ளார்!

மிக விரைவில் தனது சிறுகதைத் தொகுப்பு ஒன்றினை வெளியிடவுள்ள தமிழ்ப்பிரியா குறுநாவல் எழுதுவதிலும், கவி புனைவதிலும், பேட்டிக் கட்டுரைகள் எழுதுவதிலும் திறன் மிக்கவர்! இவரது பல கதைகள் அகில ஈழ ரீதியில் நடந்த பல போட்டிகளில் பரிசில்கள் பெற்றுள்ளன!

இதுவரை 47 சிறுகதைகள் எழுதியுள்ள தமிழ்ப்பிரியாவிடம் தங்களது கதைகளில் தங்களைக் கவர்ந்தது எவை என வினவிய போது "அந்தளவு தூரம் எழுத்துலகில் நான் என்னத்தைச் சாதித்துவிட்டேன்" என்ற தன்னடக்கமான பதிலே கிடைத்தது! கதை சொல்லும் அழகிற்கும் அதன் நடை செல்லும் தெளிவிற்கும் தமிழ்ப்பிரியா ஒரு நாவல் எழுதுவாரானால் இலக்கியச்சோலையில் அது "தனிமலராக" மணம் பரப்பும்!


## இணுவையூர்

இன்றைய இளையதலைமுறை எழுத்தாளர்களுள் காத்திரமான படைப்புகளை தனக்கே உரித்தான ஓர் தனி நடையில் எழுதிவரும் இணுவையூர் சிதம்பர திருச் செந்திநாதன் கடந்த பத்தாண்டுகளாக இலக்கிய சோலையில் சுடர் விட்டு வருகின்றார்! 1972 ல் மித்திரன் நாளிதழில் பிரசுரமான இவரது முதல் சிறுகதையைத் தொடர்ந்து இதுவரை 65 ற்கு மேற்பட்ட கதைகள் ஈழத்து மாசிகை பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன!

எனக்கென்று ஒரு தனித்துவத்துடன் நான் எழுதிக் கொண்டிருக்கிறேன். நான் எழுதுபவைகள் முற்போக்கோ பிற்போக்கோ சமபோக்கோ அது அவர்களைப் பொறுத்தது! முற்போக்கு கொள்கைகளை வைத்து கதை படைத்த எழுத்தாளன் அதன்படி வாழ்ந்து காட்ட வேண்டும்! சீதனக் கொடுமையால் குசினிக்குள்ளிருந்து குமுறும் இளம் பெண்களின் கண்ணீரைப் பற்றி கதைகள் எழுதும் எழுத்தாளனே சீதனம் வாங்கி கல்யாணம் செய்யும் (அதுவும் எழுத்தால் சம்பாதித்த புகழுக்காக கூடுதலான சீதனம்) தற்போதைய நிலையை யாவரும் உணர்வர்! நல்லதை சொல்ல வேண்டும்! சொன்னபடி ஒழுக வேண்டும்! வேடதாரிகளாக நடமாடக்கூடாது — இதுதான் எனது உறுதியான நோக்கம் எனக்கூறும் இணுவையூர் எழுத்துலகில் அசுரவேகம் இல்லாவிடினும் இறுதிவரை எழுதிக்கொண்டே இருப்பேன் எனக்கூறிக் கொள்கிறார்!

(23ம் பக்கம் பார்க்க)

# மனைவி அமைவதெல்லாம்




(இம்மாத பரிசுக்கதை)

நவரெத்தினம் வேகமாகச் சைக்கிளை மிதித்தான். கல்லடிப் பாலத்தின் இறக்கத்தில் சைக்கிள் சர்ரென்று விரைந்த போது, அவன் எண்ணங்கள் வேறெங்கோ விரைந்து, கொண்டிருந்தன.

பெண்களைப் புரிந்து கொள்வது கஷ்டம் என்பதில் சந்தேகமில்லை. ஆனல் நல்லம்மா கூடவா அப்படி?

ஒரு கோணத்தில் பார்த்தால் அப்பாவியாகத் தோன்றுகிருள். இன்னொரு கோணத்தில் பார்த்தால் அப்படியில்லைப் போலவும் தோன்றுகிருள். ஒரு சமயம் அடக்கமான பெண் என்று நினைக்கத் தோன்றுகிறது. இன்னொரு சமயம் ஆட்டக்காரி என்று எண்ணவும் தோன்றுகிறது.

எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கையில்லாத ரவிக்கையை இன்றும் விடவில்லை, இப்போது லோஹிப் சாரி வேறு. கேட்டால் வேலை பார்க்கும் பெண்கள் என்றுல் அப்படித்தான் இருக்கவேண்டுமாம். இதெல்லாம் தொழிலுக்காகப் போட வேண்டிய வேஷம் என்கிருள். "அவள் ஒரு தொடர் கதை" பார்த்திருப்பாளோ?

ஏழைப் பெண் என்று கைகொடுக்க முன் வந்தால் என்னையே ஆழம் பார்ப்பது போல சில சமயங்களில் பேசி விடுகிருளே. பேச்சில் அவளை வெல்ல முடியாது. அதில் சந்தேகமே இல்லை. எப்படியான முட்டாள் தனமான காரியத்தைச் செய்தாலும் அதற்குச் சாமர்த்தியமான பதில் ஒன்று தயாராக வைத்திருப்பாள். இல்லாவிட்டால்...

அந்த எக்கவுண்டன் கூறிய வார்த்தைகளை என்னிடம் சொல்லவேண்டிய அவசியம் என்ன? சிவராசாவைக் கொண்டு மணிக்கூடு வாங்க வேண்டிய அவசியம் என்ன?

நவரெத்தினம் மட்டக்களப்பின் பிரபல கொந்துறாத்துக்காரர் நல்லதம்பியின் பிரதிநிதி. பிரதிநிதி என்ன அவனேதான் உண்மையான "நல்லதம்பி," அதாவது நல்லதம்பி ஆற்றவேண்டிய சகல காரியங்களையும் நவரெத்தினம் ஆற்றி வந்தான். அவன் காட்டிய இடங்களில் கையெழுத்துப் போடுவது மட்டும் நல்லதம்பியின் வேலை. நேர்மை, திறமை, ஆற்றல் முதலிய இன்னேரன்ன சிறப்புக்களால், அவன் நல்லதம்பியையும் விடப் பிரபலமாகியிருந்தான்.

அவன் தொழில் முறையில் பல திணைக்களங்களுக்கு அடிக்கடி செல்ல வேண்டியிருந்தது. ஒரு திணைக்களத்தில் இலிகிதராக வேலை பார்த்த நல்லம்மா அவனுக்கு மிகவும் ஒத்தாசையாக இருந்தாள். டெண்டர் பத்திரம் எடுத்துக் கொடுத்தாள், வவுச்சர்களைத் துரிதமாகக் கணக்குக் கிளைக்கு அனுப்புதல் முதலிய உதவிகளை நல்லம்மா செய்ய அதற்குப் பிரதியாக வெளியே அவளுக்குத் தேவையான சில காரியங்களை அவன் முடித்துக் கொடுக்க, கந்தோர் தொடர்பு வளர்ந்தது. அதுவே காலப்போக்கில் நட்பாகவும் மலர்ந்தது.

நல்லம்மாவின் குடும்பநிலை கொஞ்சம் கொஞ்சமாக நவரெத்தினத்திற்குத் தெரிய வந்தது. முப்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்த போதும் அவள் வாழ்க்கையில் ஏன் வசந்தம் வீசவில்லை என்பதும் அவனுக்குப் புரிந்தது. வயதான தாயையும் நான்கு தம்பிகளையும் கொண்ட குடும்பத்தைப் பராமரிக்கவேண்டிய பொறுப்பு அவளுடையது. அதுமட்டுமல்ல அந்தத் தம்பிகளின் படிப்புக்கான செலவுகளையும் அவள் கவனிக்க வேண்டும்.

குருவி தலையில் பனங்காயைச் சுமந்தது போல் இந்தச் சின்னப்பெண்ணின் தலையில் இறைவன் இந்தப்பெரிய சுமையை ஏற்றியிருக்க வேண்டாம் — நவரெத்தினத்திற்கு அவள்மேல் ஒரு அனுதாபம்.

தன்மேல் ஏற்பட்ட சுமையை அவள் சந்தோஷ

மாக்த் தாங்கிக் கொள்கிருள். வெற்றிகரமாகச் சமாளித்தும் வருகிருள். சும்மாவா? அவளு டைய தம்பி ராஜன் வைத்தி யக் கல்லூரியில் இருக்கிருன். இன்னும் சில வருடங்களில் டாக்டராக வரப்போகிருன். நவரெத்தினத்திற்கு அவள் மேல் ஒரு மதிப்பு.

நவரெத்தினத்தின் சுறு சுறுப்பு, நாணயமான போக்கு, எல்லாவற்றிற்கும் மேலாக அவன் இளகிய சுபாவம் இத்த னையும் நல்லம்மாவுக்குப் பிடித் திருந்தன. அவன்மேல் ஒரு தனி யான அபிமானம் அவளுக்கு.

நட்பு வளர்வதற்குக் கேட்க வேண்டுமா? காரியால யத் தொடர்பு வீடுவரை வந்து விட்டது. நவரெத்தினம் நல் லம்மாவின் வீட்டிற்கு அடிக்கடி செல்லுவதும், இப்போது சகஜ மாகிவிட்டது. இந்தச் சந்திப் புகள், தெருவோரத்திலோ, கடற்கரையிலோ, தியேட்டர் களிலோ இல்லாமல் வீட்டில் ஏற்பட்டதால், வீட்டில் கூட இந்தச் சந்திப்புகளுக்கு ஆட் சேபனை இருக்கவில்லை. அவர் களின் சந்திப்புக்கள் இந்த அள வுக்குக் கண்ணியமாக இருந்த தால், அந்த நட்பு மேலும் வளர்ச்சியடைந்து வசந்தத் தின் வாசலுக்கு வந்துவிட்டது.

இந்தக் கட்டத்தில்தான் ஊடலுக்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன.

பெண்களிடம் சில த்மர்ஷ் கதைகள் பேசிச் சிரித்து மகிழ்ந்துவிட்டு தமக்குக் கீழ்ப் பணி புரியும் ஊழியர்களிடம் சமத்துவமாகப் பழகுவதாகப் பாவனை பண்ணுவார்கள்.

இந்தப் பின்னணியில் ஒரு பெண்ணைப்பற்றி, அவள் பணி புரியும் அலுவலகத்திலேயே "கதைகள்" கட்டிவிடுவது சக ஜம். யாராவது ஒருவருடன் இரண்டு வார்த்தை அதிகம் பேசி விட்டால் அல்லது கொஞ்சம் மனம் திறந்து சிரித்துவிட்டால் போதும் உடனே அவருக்கும் அவளுக் கும் முடிச்சுப்போட்டு விடு வார்கள். நல்லம்மாவைப் பற் றியும் இப்படியான பல மூடிச் சுக்கள் உருவாகியிருந்தன.

மணம் செய்துகொள்வேன் என்ருர். எனக்கென்ருல் ஒரே வெட்கமாகப் போய்விட்டது. முகத்தைப் பொத்திக் கொண்டு அவர் அறையை விட்டு ஓடிவந்து விட்டேன்.''

நவரெத்தினத்தின் நெஞ் சில் ஒரு துணுக்.

எக்கவுண்டன்ட் ஏகாம்ப ரம் ஒரு கிழட்டுக்கழுகாக மாறி நல்லம்மாவைத் தன் கூரிய மூக்கினுல் குத்திக்குதறிவிடக் குறி பார்ப்பது போன்ற பிரமை ஒரு கணம் தோன்றி மறைந்தது. வழக்கமான பல் லவிதான் "சில நேரங்களில் சில மனிதர்கள்" ஆமாம். அந்த எக்கவுண்டன்ட் இன்னும் இரண்டு வருடங்களில் இளைப்

## தேளே கொட்டாதே!

தேளுக்கு இடம் கொடுத்தால் ஜாமத்திற்கு நாலு தடவை கொட்டும் என்பார்கள். ஆனுல் அமரோஜி என்ற இடத்தில் உள்ள உஷா சையத் ஹபென் என்ற முஸ்லீம் பெரியவர் சமாதி அருகில் உள்ள தேள்களுக்கு இது பொருந்தாது. இங்குள்ள சமாதி அருகில் யாரோ ஒரு பெரியவர் வாக்குக் காரணமாக நிறையத் தேள்கள் இருக்கின்றன. இந்தத் தேள்களுடன் குழந்தைகள் கூட விளையாடுகிருர்கள். இவை கொட்டுவதில்லை. வேறு பகுதியிலுள்ள தேள்களைக் கூட இங்கு விட்டுப் பாருங் கள் என்று இங்கு உள்ளவர்கள் சவால் விடுகிருர்கள். அதேபோல் இங்குள்ள தேள்கள் வெளியூர் போனுல் கொட்டி விடுமாம்.

தகவல்: ரவிசந்திரன்.
மட்டக்குளி.

ஒரு அலுவலகத்தில் பல ஆண்களுக்கு மத்தியில் பணி புரியும் பெண்கள் சக உத்தி யோகத்தர்களோடு பேசிப் பழகுவது தவிர்க்க முடியாதது. ஆனுல் அந்த வாய்ப்பை சிலர் தவருன வழியில் பயன் படுத் திக் கொள்ள முற்படுவதும் உண்டு.

ஒவ்வொருவரும் ஒவ் வோரு கோணத்தில் அசடுவழி வார்கள். தலைநரைத்த கிழவர் கள் கூட பெண்களிடம் சில சேட்டைக் கதைகள் பேசா விட்டால் அவர்களுக்கு மண்டை வெடித்துவிடும். அதி காரமும் அட்டகாசமுமாக உல் விவரும் உயர் அதிகாரிகள்கூட

இதைப்பற்றி நவரெத்தி னம் ஏதாவது அவளிடம் கேட் டால், பேச்சினுல் அவனையே முட்டாளாக்கிச் சிரிப்பாள் நல்லம்மா.

ஒரு நாள் நல்லம்மா கூறி ஞள்.

"இன்று அலுவலகத்தில் ஒரு வேடிக்கை. எங்களுடைய எக்கவுண்டன்ட் என்ன கூறி ஞர் தெரியுமா? "நல்லம்மா, நான் ஏன்தான் அவசரப்பட் டுக் கல்யாணம் செய்து கொண்டேன் என்று உன்னைப் பார்க்கும் போதெல்லாம் எண் ணுகிறேன். எனக்கு திருமண மாகாமல் இருந்திருந்தால் இப்போது உன்னைத்தான் திரு

பாறப் போகிறவர்! கிழட்டு வருஸ்.

ஆனுல் நவரெத்தினத்தின் நெஞ்சைக் குத்தியது, அந்த எக்கவுண்டனின் பேச்சு, இல்லை நல்லம்மாவின் பேச்சுத்தான்.

அவன் அப்படிப் பேசிய தற்கு, காலில் கிடந்த செருப் பைக் கழட்டிப் பதில் சொல்லி யிருக்கவேண்டும். அவன் எக்க வுண்டன்ட் என்ற காரணத் தால் அப்படிச் செய்ய முடி யாது என்ருல் "ஷட்டப்" என்று ஒரு வார்த்தையாவது கூறியிருக்க வேண்டும். அதுவும் இல்லையென்ருல் தனக்கு ஏற் பட்ட இந்த அவமானம் இந்த

நான்கு சுவர்களுக்குள்ளும் புதைந்து விடட்டும் என்று அத்தோடு அந்த அசிங்கத்தை மறந்து தொலைத்திருக்கவேண்டும்.

இவை எதையுமே செய்யாமல் இந்த இழிவுரையைத் தனக்குக் கிடைத்த ஒரு பாராட்டுரையாகக் கருதி அதைப் பிறரிடம் வாய்திறந்து சொல்லவும் ஒரு பெண் துணிவதென்றால் அது, வும்தான் மிகவும் நேசிக்கும் ஒருவனிடமே கூறத்துணிவதென்றால்?- சீ இவளும் ஒரு பெண்ணா?

இன்னொரு சம்பவம்.

நல்லம்மாவின் கையில் ஒரு புதுரக மணிக்கூடு பளிச்சிடுகிறது. நல்லம்மா கொஞ்சம் பெருமிதத்துடன் கூறுகிறாள்.

"இது வெளிநாட்டுக் கடத்தல் மணிக்கூடு. இங்கே விற்பனைக்குக் கிடையாது. எனக்கென்று சிவராசா யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டுவந்தவர்."

சிவராசா! அவனா?

நவரெத்தினத்தின் மனதில் மற்றொரு "சுருக்".

சிவராசா ஒரு காதல் மன்னன். சுச்சேரியின் உள்ளேயும் வெளியேயும் அவனுக்கு நிறையக் "காதலிகள்" — கேர்ள் பிறன்ட்ஸ் இருந்தனர். அந்தக் கிளையிலேயே புஷ்பா என்ற பெண்ணுடன் அவன் நடாத்தும் சல்லாபம் கச்சேரி அறிந்த செய்தி. நல்லம்மாவுடன் கூட அவன் அளவுக்கு மீறிப் பழகுவதுண்டு. அப்படிப்பட்டவனைக் கொண்டா நல்லம்மா மணிக்கூடு வாங்கியிருக்க வேண்டும். ஏன் நான் இல்லையா? கொழும்பில் படிக்கும் அவள் தம்பி ராஜன் இல்லையா?

ஒரு வாரமாக நவரெத்தினம் நல்லம்மாவின் வீட்டுப் பக்கமே போகவில்லை. நல்லம்மாவை அவனால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

பொதுவாகவே, உத்தியோகம் பார்க்கும் பெண்களைப் பற்றி நவரெத்தினத்திற்கு அவ்வளவு நல்லபிப்பிராயம் இல்லை. இருந்தபோதிலும், நல்லம்மாவின் குடும்ப நிலையை உணர்ந்தே அவன் அவள்பால் தன் கவனத்தைத் திருப்பினான். அவன் எதிர்பார்த்த தெல்லாம் அப்பழுக்கற்ற பரிசுத்தமான இதயம் ஒன்றுதான். ஆனால் அதுகூட அவனுக்குக் கிடைக்காதோ?

குட்டை குழம்பிவிட்டது. அடியில் புதைந்திருந்த சேறுகள் சகதிகள் எல்லாம் மேலே வரத் தொடங்கி விட்டன. நல்லம்மாவைப் பற்றி அவன் நண்பன் சபாநாயகம் கூறிய ஒரு கதை இப்போது அவன் நெஞ்சத்தில் நிழலாடியது. முன்பு அதை வழக்கமான 'கதை' என்று தட்டிக் கழித்திருந்தான். ஆனால் இப்போது அவனால் அப்படிச் செய்ய முடியவில்லை. ஏன் அதுவும் உண்மையாக இருக்கக் கூடாது.

நல்லம்மா தன்னுடன் பணிபுரியும் பியன் ஒருவனிடம் மிக நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதாகவும் கணவன் மனைவிபோல் பழகுவதாகவும் ஒரு கதை. அலுவலகத்தில் சேர்ந்த புதிதில் மற்றொரு சக இலிகிதருடன் நட்பு வைத்திருந்ததாக இன்னொரு கதை. கொழும்பில் வேலை பார்த்த இடத்தில் யாருடனோ காதல் தொடர்பு வைத்திருந்ததாக மற்றொரு கதை. இந்தக் கதைகள் எல்லாம் ஏன் உருவாக வேண்டும்?

முடியாது. இவள் சகவாசமே இனி நமக்கு வேண்டாம். இப்படி எண்ணியவாறு சைக்கிளை நிறுத்தினான் நவரெத்தினம். பார்த்தால் சைக்கிள் நல்லம்மாவின் வீட்டு வாசலில் நின்றது.

அந்த நாள் முதல் இந்த நாள் வரை காதல் வியாதியின் போக்கே இதுதான் மனம் ஒன்று நினைக்கும். செயல் வேறொன்றாக இருக்கும்.

"வாங்க வாங்க, இன்றைக்கு நீங்கள் எப்படியும் இங்கே வருவீர்கள் என்றே எதிர் பார்த்தேன்"

"... ... ... ... ..."

"ஒரு வாரமாகிவிட்டதல்லவா"

"... ... ... ... ..."

"சரிதான், ஊடல் இன்னும் தீரவில்லை போலிருக்கிறது. சின்ன விஷயத்தையெல்லாம் ஏன் இப்படிப் பெரிது படுத்துகிறீர்கள்? அலுவலகத்தில் நடப்பதை மறைக்காமல் உங்களிடம் கூறினேன். அது குற்றமா?

பிளாஸ்கிலிருந்த கோப்பி கப்பில் இறங்கி அவன் பக்கத்தில் வந்து இருந்தது. நவரெத்தினம் அதைத் தொடவில்லை.

'கிளுக்' என்று சிரித்தாள் நல்லம்மா.

"உண்மையான காதல் இருந்தால் தான் இப்படியெல்லாம் ஊடல் நடக்குமாம். காதலைப் பொறுத்தவரை பொறுமையும் ஒரு அணிகலன் தான்"

"பொறுமை அல்ல பொறுமை.

"அப்பாடா, வாய்முத்து உதிர்ந்து விட்டதே. இனித் தாராளமாகப் பேசலாம் அல்லவா?"

இதன் பிறகு, பேச்சுக்கள், காதலர்களுக்கே உரிய அசட்டுப் பிசட்டு! கெக்கே பிக்கே!


இரவு எட்டுமணியாகியும் பேச்சு முடிந்தபாடில்லை' அவளுடைய தாய் முன் விறுந்தையில் உட்கார்ந்தபடியே தூங்கிப் போய்விட்டாள். தம்பிகள் இருவரும் உள் அறையில் நல்ல தூக்கம். எட்டிச் செல்லும் நவரெத்தினத்தை ஒட்டவைக்கும் வித்தை நல்லம்மாவுக்குத் தெரிந்திருந்தது.

இரவு நேரம் — தனிமை — ஏங்கும் உள்ளங்கள்!

(இதன் தொடர்ச்சி 23 ம் பக்கம்)

## இளைய தலைமுறை

# ○ நவம் அரவிந்தன்.



ஈழக்கிலங்கையில் எழுபதுக்குப் பின் ஏற்பட்டுள்ள இலக்கிய இடைவெளியை நிரப்புவதற்குப் போதிய இளைய தலைமுறையினர் தோன்றவில்லை என்பது உண்மையாயினும், உதிரியாக அங்கொன்றும் இங்கொன்றுமாக, முகம் காட்டும் முகைகள் திருப்திமட்டுமல்ல வியப்பும் தருகின்றன.

இலக்கிய உலகுடன் நீண்டகால தொடர்பு கொண்டுள்ளவர்கள் காலத்துக்குக் காலம் மாறிவரும் இலக்கியப் போக்குகளை அவதானித்திருப்பார்கள். சொல் புதிது, பொருள் புதிது என்பது கவிதைக்கு மட்டுமல்லாது புனைகதைக்கும் பொருந்தும். கதைப் பொருளில் பாத்திரவார்ப்புகளில், நடையில் வர்ணனைகளில், உத்திகளில் எத்தனை மாற்றங்கள்; எத்தனை புதுமைகள்.

மணிக்கொடிகாலம் முதல் இன்றுவரை தமிழ்ப்புனை கதையின் வளர்ச்சியில் அவ்வப்போது காலத்தை ஒட்டிய மாற்றங்கள் ஏற்பட்டுவந்திருக்கின்றன. ஒரு காலத்தில் கல்கி வை. மு. கோ. எஸ். வி. வி. முதலியோர் புனைகதைத் துறையில் கொடிகட்டிப் பறந்தனர். அதன்பின்புதுமைப்பித்தன், கு.ப.ரா.; லா.ச.ரா. மௌனி முதலியோர் முன்னணிக்கு வந்தனர். அதன்பின் அகிலன், நா. பா., லக்ஷ்மி, அநுத்தமா, எல்லார்வி, ஆர்வி முதலியோர் புகழ் பெற்றிருந்தனர். திடீரென்று இவர்கள் எல்லோரையும் பின்னணிக்குத் தள்ளிவிட்டு தி. ஜானகிராமன், நீல. பத்மநாதன், ஜெயகாந்தன் முன்னணிக்கு வந்தனர். அதிலும் ஜெயகாந்தன் கொஞ்சக்காலம் தமிழ்ப் புனைகதைத் துறையின் முடிசூடா மன்னனாக விளங்கினார். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. இன்று 'சுஜாதா' தான் தமிழ் இலக்கிய உலகின் சுப்பர்ஸ்டார். இன்று இவரைப் பின்பற்றி எழுதும் அநேக எழுத்தாளர்கள் தமிழகத்தில் உள்ளனர். சில விமசகர்கள் (ஈழம் உட்பட) 'சுஜாதா'வை இலக்கிய கர்த்தாவாக ஏற்றுக் கொள்ள முன்வராவிட்டாலும் அவருடைய எழுத்தாற்றலை காலம் நிர்ணயித்து விட்டது. எதைச் சொன்னாலும் சுருக்கமாகச் சொல்வது, சிந்தனையைத் தொடும் வகையில் சொல்வது, 'சுஜாதா'வின் தனித்துவம்.

எழுத்துலகில் சுஜாதாவின் வரவுக்குப்பின் நனவோடை உத்தி, எண்ணங்களின் ஆலாபனம், பிளாஷ்பாக் பிரலாபம், பக்கம் பக்கமாகப் பாத்திரங்களையும், சம்பவங்களையும், வர்ணிப்பது, கதாசிரியர் நடுநடுவே மூஞ்சியை நீட்டிக்கொண்டு, லெக்சர் அடிப்பது போன்ற உத்திகள் எல்லாம் அடிபட்டுப்போய்விட்டன.

தந்திபாஷை — வேகமான சம்பவ நகர்வு — இரண்டொரு சொற்களில் பாத்திரங்களையும் வர்ணிப்பது (உ-ம்: ஜரிகை அம்மாக்கள், ஏராள நர்ஸ்) வாசகரின சிந்தனைக்கு நிறைய விட்டு வைப்பது போன்றவைதான் இன்றைய எழுத்துலகில் நவீன உத்திகள்.

ஆனால், ஈழத்து எழுத்தாளர்கள் பலருக்கு இந்த யாற்றங்கள் எதுவும் இன்னும் உறைக்கவில்லைபோல் தெரிகிறது. வாரமஞ்சரிகளில் வெளியாகும் பல கதைகளைப் படிக்கும்போது நாம் எந்தக்காலத்தில் இருக்கிறோம் என்ற அதிர்ச்சியே ஏற்படுகிறது.

நல்ல வேளையாக நவம் அரவிந்தன் போன்ற இரண்டொரு இளம் எழுத்தாளர்கள்- சின்னஞ்சிறுசுகள் அந்த அதிர்ச்சியைப் போக்க உதவுகின்றனர். நவம் அரவிந்தன், ரவி ஆனந்தன், ரவிப்பிரியா போன்ற புதுமைச் சித்தர்கள் இந்த வரிசையில் இடம் பெறுகின்றனர்.

யார் இந்த நவம் அரவிந்தன்?

ஒரு காலத்தில் ஈழத்தின் பிரபல எழுத்தாளராக இருந்து, 'கல்கி' நடாத்திய ஈழத்துச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்று இன்று அஞ்சாதவாசம் செய்யும் 'நவம்' அவர்களின் புதல்வன் என்றால் 'ஓகோ, புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' என்று மிக இலகுவாகச் சொல்லி விடுவீர்கள். ஆனால் இவர் எழுத்தாளர் 'நவத்' தின் மகனே தவிர எழுத்தாற்றலைப் பொறுத்தவரை முற்றிலும் 'புதிய வார்ப்பு.'

நவம் அரவிந்தன் எழுதிய 'ஒரு சிலுவை தோள்மாறுகிறது' 'ஐந்திலே வளைந்த போது' 'சோலைவனப்பாலை' 'அவன் — அவள்' —O' போன்ற இரண்டொரு சிறு கதைகளே இவரது தனித்துவத்தைப் பறைசாற்றி நிற்கின்றன. பத்தோடு பதினொன்று என்று இல்லாமல் சற்று வித்தியாசமாக எழுதியதாலேயே இவர் இன்று சட்டென்று நமது கவனத்தை ஈர்த்திருக்கிறார்.

நவம் அரவிந்தன் இன்னும் மாணவனாகவே இருக்கிறார்.

மட்டக்களப்பு அர்ச். மைக்கேல் கல்லூரியில் உயர்கல்வி பயிலும் இவர் கல்லூரியின் கையெழுத்துப் பத்திரிகையான 'துணர்' ஆசிரியராக இருந்திருக்கிறார் ('துணர்' என்ற பெயரைக் கவனியுங்கள்) கல்லூரி நடாத்திய பாரதி நூற்றாண்டு விழாக் கட்டுரையில் இரண்டாவது பரிசு பெற்றிருக்கிறார்.

சில உருவகக் கதைகளையும், கவிதைகளையும் எழுதியுள்ள நவம் அரவிந்தன் எடுத்த எடுப்பிலேயே சிறுகதை உலகில் சுலபமாக இடம் பிடித்துக்கொண்டார்.

உருவகக்கதை என்றால் என்னவென்று புரியாது, ஆழமில்லாத குட்டிக்கதைகளையும் குறுங்கதைகளையும் எழுதிக்கொண்டிருக்கும் (பல சந்தர்ப்பங்களில் அரைத்த மாவை அரைக்கும்) எழுத்தாளர்களுக்கு நவம் அரவிந்தன் எழுதிய "முற்பகல் செய்யின்..." என்ற உருவகக்கதை ("சிந்தாமணி" 18.10.77) ஒரு வழிகாட்டி.

சிறுகதைத் தலைப்பிலேயே புதுமையைப் புகுத்திவிடும் நவம் அரவிந்தனின் "ஐந்திலே வளைந்த போது..." (சிந்தாமணி 05.10.80) என்ற சிறுகதை இவ்வாறு முடிக்கிறது.

"மெயின் ரோடைக் கடந்தான் குமரன். எதிரே அசுரத்தனமான வேகத்தோடு ஒரு லொறி.

அது நின்றது — குமரன்மேல் ஏறிய பிறகுதான்.

குமரன் குங்குமமானான். அவனது முகத்தில் மட்டும் இனம் புரியாத ஒரு நிறைவு. அவனது பிஞ்சுக் கைகளில், அந்த இளநீல வண்ணச் சேட்டுக்கான — இல்லை, தாய் தம்பி இருவருக்கும் மருந்து வாங்குவதற்கான பணம் பத்திரமாகப் பொருத்தப்பட்டிருந்தது.

நின்ற லொறியில் இருந்து இறங்கிய அவர் - குமரனின் தந்தை - குமரனின் இரத்தம் தோய்ந்த அமைதியான முகத்தைப் பார்த்தார்.

வீறிட்டலறி, தன் மகனின் சிதைந்த உடலை மடியில் கிடத்தினார்.

பெருகிய இரத்தத்தால் அவரது உடை மட்டும் சிவப்பாகவில்லை. தன் அருமை மகனுக்கு ஆசையோடு வாங்கி வந்த அந்தப் புதிய சேட்டிலும் செம்மை தோய்ந்தது...."

கதை முழுவதையும் படித்தால் கடைசி வரியிலுள்ள கண்ணீர்க்கடல் உங்களை மூழ்கடிக்கும்.

"ஒரு சிலுவை தோள்மாறுகிறது" என்ற அர்த்த புஷ்டியான தலைப்புடன் ஒரு சிறுகதை (வீரகேசரி 18.10.81) இதிலிருந்து ரத்னச் சுருக்கமான சம்பவ வர்ணனைகளுக்குச் சில சாம்பிள்கள்.

"ஜீப் ஓசையினால் அங்கே ஒரு மௌனமான கூட்டம் சேர்ந்து "என்ன" என்று அறிய முற்பட்டு அந்த 'என்ன' என்னவென்று அறிந்து கொண்டதும்......"

"ஒரு கிறிஸ்தவ வீட்டில் மரணமேற்பட்டால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது யூசுப்பின்வீடு. பெட்ரோமாக்ஸ் ஒளியில் பீடி குடித்துக்கொண்டு குசு குசுத்துக் கொண்டிருந்த சின்னக் கூட்டம்......"

".........யூசுப்பின் அறை திறக்கப்பட்டது. கம்பிகளுக்கு அப்பாலே தெய்வமாய் அவனையே நோக்கியபடி இருந்த பாதர் டானியலைப் பார்த்ததும் இதுவரை வற்றியிருந்த கண்ணீர் மீண்டும் புதுப்பிரவாகத்தோடு அவன் கன்னங்களில் நெளிகோடுகளை வரைந்தது........"

கதையுடன் ஒன்றிப்போகச் செய்யும் 'சஸ்பென்ஸ்' கடைசி வரியிலேயே விடுபடுகிறது. அத்தனை 'கல்கி'த்தனம்! இக்கதையிலும் இளம் உள்ளம் ஒன்றின் அதீத முதிர்ச்சியே சித்திரிக்கப்படுகிறது.

காத்திரமான கதைக்கருவுக்கு ஒரு கதை "சோலைவனப்பாலை". பழைய காதலை நினைத்து புதிய வாழ்வை நரகமாக்கிக் கொண்ட ஒரு பெண்ணின் கதை இது. ஆனால் அவள் கண் திறக்கிறது. எப்போது? தனது பழைய காதலன் புதிய காதலியுடன் உல்லாச வாழ்வு நடத்துவதைக் கண்டபோது. மிகவும் சமுதாயப் பிரச்னை உள்ள ஒரு கதை இது. யதார்த்த ரீதியாகவும் அதே சமயம் புதிய சிந்தனையைப் புகுத்துவதாகவும் அமைந்துள்ள இக்கதை எத்தனையோ குடும்பங்கள் அர்த்தமற்ற பழைய காதல் நினைவுகளால் தமது இப்போதைய வாழ்க்கையை அனுபவிக்காமல் வேதனையில் வெந்து சாவதைத் தடுக்கவல்லது. பல தேவதாஸ்களையும் பார்வதிகளையும் யதார்த்த வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும் சிந்தனைத் திருப்பத்தை ஏற்படுத்தக்கூடியது.

"அவன் + அவள் = O" என்ற மற்றொரு புதுமையான தலைப்பைக் கொண்ட சிறுகதையில் இரு வெவ்வேறு காட்சிகளை ஒன்றுடன் ஒன்று பின்னிக்கொண்டு நகர்த்தும் புதிய உத்தி கையாளப்பட்டுள்ளது. தந்தி பாஷையும், சுருக்க நடையும் கதையின் இறுக்கத்துக்குத் துணைபுரியும் அம்சங்கள். இளம் வாலிபன் ஒருவன் தனது குடும்பப் பொறுப்புக்களை உதறித் தள்ளிவிட்டு எதிர்வீட்டு ஜன்னல் காதலியுடன் ஓடிவிட முனைவதையும், அவன் தந்தையின் சாதுரியத்தால் காதலி அத்திட்

டத்திற்கு ஒத்துழைக்காததையும், மிகவும் நாசூக்காக, நவீனமாகச் சொல்கிறது கதை.

ஒரு காலத்தில் நமது இலக்கிய உலகில் ஏற்பட்ட தப்பான 'மூளைச்சலவை'யினால் அநேக எழுத்தாளர்கள் — முதிர்ந்த, பரிசு பெற்ற எழுத்தாளர்கள் உட்பட — இன்றும் 'சுரண்டல்' கதைகளாக எழுதி அறுத்துக் கொண்டிருக்கின்றனர். யாழ்ப்பாணத்துக் கதைகள் என்றால் சீதனப்பிரச்சினை, சாதிப் பிரச்சினை, மட்டக்களப்புக் கதைகள் என்றால் புராதன காலத்துப் போடியார் கதைகள்— போதும் போதாதற்கு மண்வாசனை என்ற மயக்கத்தில் தலைவலி ஏற்படும் அளவுக்கு பேச்சுத்தமிழ் அறுவை. இவை திகட்டும் அளவுக்கு மலிந்துவிட்ட நிலையில், சிறுகதைக்கே உரிய சிற்பவனைவு, சிந்தனைச் செறிவு, கலை நயம், கருத்தாழம் கொண்ட சிறுகதைகளைப் பார்க்கும்போது மனதுக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது.

நவம் அரவிந்தன் போன்ற இளசுகள் நமக்கு இந்த ஆறுதலைத் தருகின்றன. ஆனால் தரம் கண்டு பத்திரிகைகள் கதைகளைப் பிரசுரிக்கிறார்களா அல்லது எழுந்த மானத்தில் கையில் அகப்படும் கதைகளைப் பிரசுரித்து விடுகிறார்களா என்பது இன்னும் சந்தேகமாகவே இருக்கிறது. புதுமைப் பொலிவுடன் கூடிய கதைகள் அதிகம் கண்ணில் படாமல் இருப்பதற்கு வேறு என்ன காரணம்தான் இருக்க முடியும்?

நவம் அரவிந்தனுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. பிரசுரம் ஆவதைப்பற்றிப் பொருட்படுத்தாமல் நிறைய எழுதிக் கொண்டே இருக்கவேண்டும். (இன்றைய இளம் எழுத்தாளர்கள் அனைவருக்கும் இது சமர்ப்பணம்) விமர்சகர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் தத்தமது வட்டங்களுக்கு வெளியே வந்து இளம் ஆற்றல் எங்கிருந்தாலும் அதை இனம்கண்டு மதிப்புத்தர வேண்டும்.

நம்மிடம் ஒரு பெரிய குறை இருக்கின்றது.

தமிழகத்து ஜனரஞ்சகப் பத்திரிகையில் வெளிவரும் மூன்றாம்தரப் பத்திரிகை ரகக் கதைகளை மட்டும் படித்துவிட்டு, ஈழம் உயர்ந்து நிற்கிறது என்று மார்தட்டிக்கொள்வோம். ஆனால் தமிழகத்துத் தரமான படைப்புகளுடன் ஒப்பிடும்போது நாம் எங்கே நிற்கிறோம் என்பதை எண்ணிப்பார்ப்பதில்லை. வர்க்கப்போராட்டம் பற்றிய கதைகள் மட்டுமே இலக்கியம் என்ற மாயையிலிருந்து நாம் விடுபடவேண்டும். உண்மையில் பிரசாரம் என்ற சங்கதிக்கே இலக்கியத்தில் இடமில்லை.

ஈழத்தைப் பொறுத்தவரை மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்பதை மறந்துவிடாது இலக்கியப் படைப்புகளை நாம் அணுகவேண்டும். அப்படிச் செய்தால் நவம் அரவிந்தன் போன்ற முகைவிடும் இளம் ஆற்றல்கள் முகிழ்த்து மணம் பரப்பும்.

— மணி —

## தகவத்தின் வேண்டுகோள்.

புனைகதை இலக்கிய மேம்பாட்டுக்குழைக்கும் நிறுவனமாகிய தமிழ்க் கதைஞர் வட்டம்

இலங்கையின் தமிழ் இலக்கிய வெளியீட்டுத் துறை இன்று தாழ்வும் வீழ்வும் அடைந்திருப்பதனை வெகுவிசனத்துடன் நோக்கி, பொருளாதாரம் சார்ந்த காரணிகளினாலேயே இப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதனை உணர்ந்து, இப்பாதிப்புக்களிலிருந்து இந்நாட்டு தமிழ்ப் புனைகதை இலக்கிய வெளியீட்டுத் துறையை மீட்டு முன்னெடுத்துச் செல்வதற்காக நெறிமுறைகளையும், செயற்பாடுகளையும் ஆராய்ந்து கீழ்வரும் விதந்துரைகளை முன்வைத்து, இவற்றை நமது அரசு நிறைவேற்ற வேண்டுமெனப் பணிவாகக் கேட்டுக் கொள்ளுகின்றது.

அ) புனைகதை இலக்கிய வெளியீட்டாளருக்குக் கணிசமான ஒரு தொகையை மானியமாக வழங்கல்.

ஆ) கடுதாசியை சலுகை விலையில் பெற ஏற்பாடு செய்தல்,

இ) எழுத்தாளருக்கு நூல் வெளியிடுவதற்குத் தேவையாகும் பணத்தை வங்கிகள் கடனாக வழங்க ஏற்பாடு செய்தல்

ஈ) புனைகதை இலக்கிய நூல்களை அரச அச்சகக் கூட்டுத்தாபனம் சலுகை விலையில் பதிப்பிக்கவும், வெளியீட்டாளர்கள் செலவைத் தவணை அடிப்படையில் செலுத்தவும் ஏற்பாடு செய்தல்.

1. இலங்கைத் தமிழ் நூல்கள் இந்நாட்டிலே விரிவாகச் சந்தைப்படுத்தப்படுவதற்குக் கீழ்வரும் நடைமுறைகள் கையாளப்படல் வேண்டும்.

அ) இந்நாட்டுத் தமிழ்ப் பிரசுரங்களையும் கொள்வனவு செய்யுமாறு தமிழ் நூல் இறக்குமதியாளரைப் பணித்தல்.

ஆ) இந்நாட்டுத் தமிழ் நூல்களை அரசு கொள்முதல் செய்து நூல்நிலையங்களுக்கும் பாடசாலைகளுக்கும் வழங்கல்.

இ) பரிசளிப்புத் தேவைகளுக்கு இலங்கைத் தமிழ் நூல்களை வாங்குமாறு. அரச நிறுவனங்களைத் தூண்டுதல்.

ஈ) இலங்கைத் தமிழ் நூல்களை விற்பனை செய்வதற்கெனத் தலைநகரிலும் மற்றைய நகரங்களிலும் அரசு நூல் விற்பனை நிலையங்களை நடத்தல்.

2. இலங்கைத் தமிழ் நூல்கள் தமிழ் வாழும் பிற நாடுகளுக்கும் சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

# காவியமானவள்

## குறுங்காவியம்

அனலை - ஆறு - இராசேந்திரம்

மாதவன் மங்கை நின்னை
    மயக்கியே கெடுத்ததென்றோ
தீதென உணர்ந்து நின்றன்
    திருக்கரம் பற்றி வாழ்வின்
நீதியைக் காக்க நிற்கும்
    நிறைகுணம் கண்டதாலே
ஆத்திரம் விட்டொழித்து
    அவனுடன் வாழ்க என்றார்.

"வாழ்வது எனக்கு அன்றோ
    வந்துமே போன தொன்மைப்
பாழ்கனவென்றே காட்டி
    பறந்துமே போயிற்றையா
நாளுமே இன்று போன்று
    நானிருந்தழிவ னல்லால்
மீளவும் வாழ்வெனக்கு
    வேண்டுவதில்லை சொன்னேன்"

"என்னடி...?" என்று அன்னை
    அதிர்ச்சியுற்றோங்கத் தந்தை
பொன்மனத் துள்ளே வைத்த
    பூரண கும்பம் சாய
கன்மனம் கொண்டு நிற்கும்
    கவின் மகள் நிலைமை கண்டு
என்னினிச் செய்வம் எல்லாம்
    ஆண்டவன் முடிபு" என்றார்.

'குற்றங்கள் இழைத்தோர் செய்த
    குறைதனை உணர்ந்து கொண்டால்
அற்புதப் பெரியராவர்

பெற்றவர் நிலைமை பார்த்தும்
    பேயென நிற்கலாமோ?
நற்குணச் செல்வி வாழ்வை
    நடத்திடு மாதினோடு"

"தப்புகள் செய்த பேர்க்கு
    தண்டனை உண்டு ஐயா
இப்பழி செய்த எற்கு
    ஏனது இல்லை சொல்வீர்
கற்பினை அழித்த பாவி
    காலங்கள் தோறு மந்த
அற்புதப் பொருளை எண்ணி
    அழுதிடல் சாலும் தானே"

திடமுடை நெஞ்சினோடு
    தீர்ப்பினைச் சொன்ன வண்ண
மடமயில் வார்த்தைக் கீடு
    வழுத்திட வகையே இன்றி
"புடமிடும் உணர்வைப் பொல்லாப்
    புன்சிறை வைக்கின்றாயே
அட இது அடுக்காதம்மா
    அநியாயம் விடுக" என்றார்.

சொன்னது செவியிற் கேட்டு
    சொப்பனம் போல விட்டு
கன்னியோ தனது போக்கே
    காலத்தின் வீதி என்றாள்
மன்னிடும் துயரினோடு
    அங்கையர் வழி நடந்து
பன்னினார் நடந்த யாவும்

ஆண்டவன் முடிபு" என்றார்.

'குற்றங்கள் இழைத்தோர் செய்த
குறைதனை உணர்ந்து கொண்டால்
அற்புதப் பெரியராவர்
அவர்களே தெய்வமம்மா!

கன்னியோ தனது போக்கே
காலத்தின் வீதி என்றாள்
மன்னிடும் துயரினோடு
அங்கையர் வழி நடந்து
பன்னினார் நடந்த யாவும்
பதறினர் அவர்கள் ஒன்றாய்.

(வேறு)

முல்லைநகை மெல்லியலாள் முகத்தைப் பார்த்து
முடிபறிய மாதவனோ புறப்பட் டனனாள்
இல்லமது சென்றிட்டான் வாயில் தன்னில்
ஈர்க்கென்ன இழைத்திருந்த அவளே நின்றாள்
தொல்லையினை உணராது பிஞ்சு ஒன்று
தோளினிலே உறங்கிடவே கண்டான் அந்தோ
சொல்லிடவே முடியாத சோகம் சூழ்ந்து
சொட்டுகளாய்க் கண்ணீரை நிலத்தில் விட்டான்.

கண்களினைக் கரங்களினாற் கசக்கிக் கொண்டே
"புனிதர்" வென்றஞ்சியவா றழைத்தான் மெல்ல
புன்முறுவல் வலிந்தழைத்து இதழிற் சேர்த்து
புனிதாவோ "வாருங்கள் அமர்வீர்" என்றே
திண்ணையிலே பாய்விரித்தாள் அமர்ந்தான் மாது
திசையெங்கும் பார்த்தபடி முதலிற் கேட்டான்
"கண்மணியே மன்னித்தால் என்ன?" என்றான்
காரிகையோ மௌனமதே பதிலாய்ச் சொன்னாள்.

"தவறுவிடல் மனிதகுல இயல்பு; அந்தத்
தன்மையினை உணர்ந்துவிடின் அதுவே பண்பு.
அவம் செய்தேன் நின் வாழ்வை ஆண்டு ஐந்தாய்
அத்தனையும் மனந்திருந்தி ஒத்துக்கொண்டேன்
புவிதன்னில் இரந்துண்ணும் ஏழைதம்மை
'போ' என்னல் தகுமோ? நின் உள்ளம் கொள்க
கவரிமான் நீயறிவேன் கருணை கூர்ந்து
கயவன் எனை 'மன்னித்தேன் என்று சொல்வாய்"

(வளரும்)

(கடந்த மாத அட்டைப்படக் கதை)

# அக்கினிக் குஞ்சுகள்

தாவலூர் எஸ்.ஜெகநாதன்.—




அவன் ஜீப் வண்டியின் மட்காட்டில் சாய்ந்து நின்றான். பீடியை ஒரு 'தம்' இழுத்து விட்டு புகை மண்டலம் சூழ சுகானுபவத்து நிமிர்ந்த போது அலுவலகப் படிகளில் கனகரத்தினம் இறங்குவது தெரிகிறது. கனகரத்தினம் அலுவலகத் தலைவர். அவரை மொய்த்துக்கொண்டு பின்னால் தொடரும் பஞ்சலிங்கம், சிவராசா...... ஐயாமார் வரும் வரத்திலேயே இவனுக்குப் புரிந்து விடுகிறது. இனி பயணத்துக்கு றெடியாக வேண்டியதுதான்.

நேற்றே இதைப்பற்றி இவன் அறிந்துதான் இருந்தான். சோம்பல் முறித்தபடி பஞ்சர் ஐயா அலுவலகத் தலைவரின் அறைக்குள் நுழைந்த போது இவன் வாசலடியில் தான் நின்றான். உள்ளே தலைவருடன் இருந்தவர் சிவராசா. அலுவலகப் பதவிகளில் ஏற்றத் தாழ்வுகள் இருந்தாலும் 'ஐயாமார்' வேலை விளையாட்டுகளில் மச்சான் மார்தான்.

"சும்மாவே இருந்தால் போர் அடிக்குது... ஒரு ட்ரிப் ஒழுங்கு செய்தால்"...... இது பஞ்சர் ஐயாவின் பிரேரணை.

"ஃபுல் டே ப்ரோகிராம்.. பிளான் பண்ணவேணும்." இது தலைவர்.

"இந்தப் பக்கம் முழுவதும் அலுத்துப்போச்சு செட்டிகுளத்துக்கு .."

"சிவராசா ஐயாவின் தங்கையின் குடும்பம் செட்டிகுளப் பக்கம் இருப்பது தலைவருக்கும் தெரியும்.

"சரி போனால் போச்சுது... அங்க போயும் கலைகாலம்"

முற்றுப்புள்ளி விழுந்தது.

பொக்கற்றுக்குள் திணித்த கைகளோடு வெளியே வந்த பெரிய ஐயா கூறினார்.

"நாளைக்கு எட்டு மணிக்கு செட்டிகுளம் போக வேணும்"

இவன் தலையாட்டியவன் இன்று தயாராகி நின்றான். ஐயாமார் வருகிறார்கள்.

"ராசையா"

"ஐயா" என்று பணிவோடு நடந்தான். தன் பேரிலேயே ஐயாவை சேர்த்து விட்ட தகப்பனை மனம் உள்ளூர வாழ்த்துகிறது.

"எல்லாம் றெடிதானே"

"ஓம் ஐயா"

ஜீப் உறுமுகிறது.

வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாக 'விர்' என்று பறக்கிறது.

இளம் காலைப் பொழுது மலர்ந்திருந்தது. குன்றும் குழியும் என்றாலும் வீதி இராசையாவுக்கு பழக்கமானது. அனாயசமாக ஓட்டுகிறான். இருமருங்கும் கமங்களையும் காடுகளையும் ஓடவிட்டு ஜீப் முன்னேக்கி... முன்னேக்கி...

அரசாங்கப் பெற்றோலை கரியாக்கியபடி...... மத்திய கிழக்குக்கு அரசாங்கம் அனுப்பிய எண்ணெய்ப் பெட்டிசத்தில் கையெழுத்து நிரப்ப ஓடித்திரிந்தவர் தலைவர் கனகலிங்கம்.

மெயின் வீதியிலிருந்து வெட்கத்துடன் கிளை பிரியும் சிறிய மண் வீதியடியில் கனகர் கத்துகிறார்.

"இதாலை விடு...... இதுக்குள்ள என்ரை மாமா ஒருத்தற்ற வீடு இருக்குது"

"கன தூரமே ஐயா"

"சீ... சீ... நாலு மைல்தான் நீ விடன்"

'நீ விடன்' என்ற வார்த்தைகளின் அழுத்தம் ஜீப்பை 'சர்' என்று மண் வீதியில் திருப்புகிறது.

"இந்தா வந்திட்டன்" என்று மாமா வீட்டினுள் கனகர் நுழைந்தபோது நேரம் ஒன்பதரை. அவரது 'இந்தா' வுக்காகக் காத்து ஜீப் உறுமல் தீராமல் நிற்கிறது.

"நேரம் போச்சுது என்கிறார் பஞ்சர். தலைவர் இல்லாத துணிவில்.

"என்ன நேரம்...... அங்க போய் என்ன வெட்டி விழுத்தவே போறம்" சிவராசா அடக்குகிறார்.

பத்துக்குதான் மாமா கனகரைப் பிரிய விட்டார். "ஓமோம் வரக்குள்ள...... நூறு தேங்காய்... கொண்டு வந்து போட்டு விட்டுப் போறன்."

கனகர் பாய்கிறார்.

ஜீப் பறக்கிறது.

சில நிமிடங்கள் தான்.

## லிங்கனின் நகைச்சுவை

ஒருசமயம் லிங்கனிடம், ஓவியர் ஒருவர் வரைந்த படத்தைக்காட்டி அபிப்பிராயம் கேட்டார்கள். "அடேடே, இவர் மிகச் சிறந்த ஓவியர் போல் இருக்கிறதே! கடவுளின் பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிப்பவராகத் தோன்றுகிறாரே!" என்றார் லிங்கன்.

'நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், தெரியவில்லையே?" என்றார் பக்கத்தில் அமர்ந்திருந்த பிரமுகர்.

"விண்ணுலகத்திலும்சரி, மண்ணுலத்திலும்சரி, பூமிக்கடியிலுள்ள தண்ணீருக்குள்ளும் சரி — இருக்கிற எந்தப் பொருளின் சவாலையுமே இந்த ஓவியர் எடுத்துக் கொள்ளவில்லை என்றுதான் நினைக்கிறேன்!" என்றார்.

— ச. ஐயாத்துரை —

"சும்மா போய்..." பஞ்சர் நாக்கைச் சப்புக் கொட்டினார். இந்த விசயத்துக்கு எப்போதுமே பிள்ளையார் சுழி போடுவது அவர்தான்.

"க்ளைம் வரும்தானே விளையாட்டுக் காசு தண்ணி "மாதிரி..."

"செல்லத்துரையின்ர பாமுக்கு போனால் எல்லாம் கிடைக்கும்" என்று கூறிவிட்டு கனகர் ட்றைவரை முறுக்குகிறார்.

"இராசையா"

"ஐயா"

"நேரம் போச்சுது...... கெதியா விடு எவ்வளவு வேலை கிடக்குது"

வேலைக்கான அவசரம் அல்ல இது என்பது இராசையாவுக்குத் தெரியும்.

செல்லத்துரையின் சாராயப் போத்தல் உடைபட்டு உள்ளே போக்கும் அவசரம். "ங்......ங்" உறுமிக் கொண்டு பறக்கிறது ஜீப்.

செட்டிகுளம் பஸ்தரிப்பில் ஒரு வட்டம் அடித்து இதாலை விடு என்கிறார் சிவராசா.

போத்தல் உடையுமுன் தங்கையைக் கண்டு திரும்பி விடும் ஆவல்.

கண்டு திரும்பிய போது மதியம் நெருங்கி விட்டது. மண்டை பிளக்கும் வெய்யில். கனகர் வழி காட்ட.. இலட்சுமி பண்ணையின் நுழைவாயிலைக் கடந்து விட்டு முற்றத்து மேட்டில் ஏறி நிற்கிறது ஜீப். எல்லாரும் இறங்குகிறார்கள்.

கனகர் இப்போது வலு அக்கறையாகக் கேட்கிறார். "என்னத்துக்கு வந்தனிங்கள்?"

ஜீப்போடு சாய்ந்து கை கட்டி நிற்கிறார் இராசையா. வீட்டின் முன்னால் விரிந்து கிடக்கும் பென்னம் பெரிய தோட்டத்தில் பச்சை சிந்திக் கிடக்கிறது. மிளகாய்ச் செடிகள், வெங்காயம் அறுவடைக்குத் தயாராக...... அதற்கும் அப்பால் மரக்கறி வகைகள் சில... என்ன குறை என்பது போல் செழித்துத்தான் இருந்தது தோட்டம் முழுவதும். இலட்சுமிப் பண்ணையின் உரிமையாளர் செல்லத்துரை ஓடி வருகிறார்.

"வாங்கோ... வாங்கோ"

விவசாய இலாகாவுடன் ஒட்டி உறவாடி பயன் பல பெற்றவர் அவர். நெளிவு சுளிவுகள் அவருக்குத் தெரியும்.

ஓடி ஓடி உபசரித்தார்.

"இருங்கோ இருங்கோ.. களைப்பாய் இருக்கும்"

கறுப்பு எடுத்தார். வீட்டில் இறைச்சி வத்தல் இருந்தது. தடபுடல்... "பார்த்தீங்களா வீணாய் அவசரப்பட்டு..." என்பதுபோல் கனகர் சகாக்களைப் பார்க்கிறார்." அதனாலென்ன வீணாகவா போய் விடும் "என்பதாக அவர்கள் பாவனை காட்டி சமாவில் இறங்க.

"ட்றைவருக்கும்..." என்கிறார் பஞ்சர்.

"நான் கவனிப்பன்" செல்லத்துரை ஓடுகிறார்.

இராசையா கைகளால் தடுத்தாட் கொண்டு விட்டு— ஜீப்பை நிழல் ஓரமாக விட்டுப் பூட்டுகிறான். தானும் அந்த நிழல் ஓரமாகவே ஒதுங்கினான்.

"சத்து நேரத்தில சாப்பாட்டுக்கு ஒழுங்காக்கிப் போடுவன்" என்றுவிட்டு அந்த மூலைப்பிலேயே மூழ்கி விட்டார் செல்லத்துரை.

"ம் என்னத்துக்கு வந்தனுங்கள்" விசயத்துக்கு வருகிறார் தலைவர் கனகர் பஞ்சர் முடிச்சை அவிழ்த்தார்.

"செட்டிகுளப் பகுதியில் விவசாய நிலைமை, விவசாயிகளின் நிலைமைகளைக் கண்டறிதல்"

"பள்ளிக்கூடப் பரிசோதனையிலை நோக்கம் எழுதினது மாதிரி சொல்கிறான்" சிவராசருக்கு ஏறத் தொடங்கிவிட்டது

"கண்டால் போச்சுது" என்று கைகளை அகல விரிக்கிறார் கனகர்.

ஒன்றிலும் சம்பந்தப்படாதவன் போல் தனித்தே நிற்கி

ருன் இராசையா. இவர்களின் வரவு சற்றைக்கெல்லாம் 'கிசு கிசு' என்று பரவத் தொடங்கி விட்டது.

"கவுண்மேந்தில இருந் விவசாய அதிகாரிங்க வந்தி காங்களாம் .... செல்லத்துரை ஐயாட கமத்துக்கு ....."

அந்தச் சுற்றுப்புறங்களில் இருக்கும் 'பலதுகளும்' கூடத் தொடங்கின

ஐயாமாரை நெருங்க முதலில் பயம் தடுத்தது. ஒரு கிழவன் துணிந்து முன்னல் வந்து இராசையாவிடம்.........

"ஐயா இவங்கெல்லாம் எதுக்குங்க வந்து......"

"எதுக்கா ........ எனக்குத் தெரியாதா தண்டம்தான்"

"உங்களுக்கென்ன தமாஷ் பண்றீங்க.... நாங்க பட்டினி. பட்டினி..... சொல்லுங்கையா" கிழவன் தீவிரமாகத்தான் கேட்கிருர். இராசையாவும் சீரியஸ் ஆகி கூறினன்.

"இந்தப் பகுதி விவசாயிங்க நிலைமைகளை அறிஞ்சுக்கப் போருங்க"

"அறிஞ்சு......"
"தீர்ப்பாங்க"

அவர்களின் முகங்களில் தான் எவ்வளவு பிரகாசம்...... இராசையாவுக்கு நெஞ்சம் கனத்தது. இந்தப் பச்சை உள்ளங்களின் ஏமாற்றத்துக்கு தானும் உடந்தையாகி......

வந்தவர்கள் பயம் தணியாத போதும் எதிர்பார்ப்பின் உந்துதலால் ஐயாமாரை அணுகுகிருர்கள். ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டது போல் பதறியடித்து ஓடி வருகிருர். செல்லத்துரை

"இவங்கெல்லாம் யாரு..... உங்க கூலி ஆக்களா?"

"சீசீ......... அவங்கெல்லாம் சாப்பிடப் போட்டாங்க தங்க தங்க கூடுகளுக்கு......"

"இவங்க"

"நம்ம சுகத்தை சுற்றிவர யானையில ஈமொய்ச்ச மாதிரி காடு புடிச்சு கமம் செய்யிற வங்க"

"தோட்டக் காட்டாங்களா? என்று" இடையில் புகுந்தார் பஞ்சர்.

"அதுவும்தான் இதுவும் தான்" என்று விட்டு ருத்ரா வேகமாகத் திரும்பினர் செல்லத்துரை:
"போங்கடா அங்காலை ஐயாமாரை நெருங்கப்படாது"

செல்லத்துரை எலும்புகளில் பாய்ந்து விரட்ட ஐயாமார் பிளேட்டில் இருந்த இறைச்சியில் பாய்ந்து......

"இந்தச் சனியன்களாலை பெரிய கரைச்சல்" தனது பங்குக்கு சொல்லி வைத்தார் சிவராசா

வந்தவர்கள் வழக்கமான ஏமாற்ற முகத்துடன் திரும்பி நடக்க தன்முனைப்பில் வென்று விட்டவராக அத்தகைய வெற்றிகளே தனக்கு என்றும் சொந்தம் என்று இறுமாந்தவராக செல்லத்துரை சமையற்கட்டுக்குள் நுழைகிருர். தனது மேற்பார்வையிலேயே ஐயாமாருக்கு சமைத்துப் போட்டு குளிர்மைப் படுத்த வேண்டும் என்ற கரிசனை.........

இவர்கள் திரும்பிக் கொஞ்ச தூரம்தான் நடந்தவர்கள் ஜீப்பின் அருகே நிழலில் ஒதுங்குகிருர்கள். உதட்டைச் சுடும் பீடியை எடுத்தெறிந்து விட்டு நிமிர்கிருன் இராசையா.

"ஐயா.........." அவர்களில் ஒருவனுன அதிக துயரத்தையும், காலத்தையும் சுமந்த கிழவன் முன்வருகிருன்.

"தம்பி என்றே சொல்லுங்க"

"தம்பி.............." அத்தனை வாஞ்சையும் நம்பிக்கையும்..... இராசையாவுக்கு கண் கலங்கி விட்டது.

"தம்பி நீங்கதான் ஒரு வழி பண்ணணும்"

இவனுக்குத் தாங்க முடியாமல் போய் விட்டது.

"நான்..... நான்.... நான்"

"மகாராசா.......... முதல்ல எங்க துயரத்துக் காச்சும் காது குடுங்க"

இவன் மனம் அடிபட்டுப் போய் விட்டது.

துயர் தீர்ப்பது ஒரு புறம் இருக்கட்டும். அவர்களின் துயரத்தைக் கேட்க காதுகள் கூட இல்லையென்ருல்.........

"பெரியவரே நீங்க சொல்லுங்க...... நான் கேட்கிறன்."

அவர்களிடம் எத்துணை மகிழ்ச்சி.. ....... நம்பிக்கையான மலர்ச்சி.

## தேடியது எதுவோ?

ஆங்கில இலக்கிய மேதை ஜான்சன் தனது உலகப் புகழ்பெற்ற அகராதியை வெளியிட்டதும், அவரை இரண்டு பெண்கள் சந்தித்து, தங்களின் அகராதியில் இழிவான மொழிகளையெல்லாம் சேர்க்காது நீக்கியதைவிட்டு தங்களின் பாராட்டுகளைத் தெரிவித்தார்கள். அப்பொழுது ஜான்சன் அவர்களைப்பார்த்துச் சிரித்தபடி "நீங்கள் அவற்றையெல்லாம் தேடித் தேடிப் பார்த்தீர்களா" என்று அவர்களை அசடு வழிய வைத்தாராம்.

தகவல்: ச. ஐயாத்துரை.

"உம் பேரு"
"ராமையாங்க"

அவனும் ஐயா....... இவனுக்கு இனம் புரியாதநெருக்கமான இணைப்பாக......

"என்னவெல்லாம் செய்கை பண்றீங்க"
"அதையேன் கேட்கறீங்க மிள்காய் வெங்காயம் அப்படின்னு போட்டனுங்க"

"அப்புறமென்ன ....."

"மருந்தென்று வெல..... உரம் என்று வெல.... வாயைக் கட்டி பாடுபட்டா......" கிழவனுக்கு மூச்சு வாங்கியது.
"என்ன வெல விக்குது மிளகா வெங்காயம் அறுத்தோமுன்னு...... பாதாளத்தில விழுகிறது வெல .. வெளிநாட்டுல இருந்தெல்லாம் கொண்டந்து குவிக்குது ராசாங்கம்"
இவனுக்கும் அது தெரிந்துதானே இருந்தது. இருந்தும் அப்போதுதான் அறிந்து துயரப்படுபவன் போன்று கேட்டான்.
அப்படிங்களா"?
"நட்டத்துக்கு நட்டம் எங்க உழைப்பு நாய்ப் பொழைப்புங்க"

"அப்பிடியெல்லாம் சொல்லப்படாது...... இந்தா செல்லத்துரை பிழைக்கலையா?"

அவர்கள் எல்லாருமே குமுறினார்கள். அந்தக் குமுறலின் பிரதிநிதியாக கிழவன் சொன்னான்: "அவருக்கு முடியுங்க... விளைச்சலை பதுக்கி வைச்சு நல்ல வெல வர்றப்ப விப்பாரு. ராசாங்கத்தில ஒதவி வேற.... வெவசாயிகளுக்கு ராசாங்கம் ஒதவி செய்யிறதுன்னுறாங்களே அதெல்லாம் அவங்க மாதிரி ஆளுங்களுக்குத்தான்"

"ம்.." இராசையா யோசிப்பது போல் பாவனை செய்தான்.

"நியாயமுங்களா நீங்களே சொல்லுங்க தொர... வாயையும் வயித்தையும் கட்டி பாடுபட்டதையும் நட்டத்தில குடுத்திட்டு..... இன்னும் எத்தனை நாள் பட்டினி..... எவ்வளவு பேரு பட்டினி."

இராசையா நிமிர்ந்து பார்த்தான். முன்னால் கூடி நிற்கும் இந்தப் பட்டாளம் வாழ்க்கையிலேயே ஏக்கமும் ஏமாற்றமும்...... பட்டினியும் பரிதவிப்பும் நிரந்தரமாகி.... உழைப்பு உழைப்பு பட்டினி பட்டினி என்றாகி......

"மட்டுமுங்களா ?" கிழவன் கேட்டு பெருமூச்சு விடுகின்றான்.

"ம்...." இராசையாவிடம் தாங்க முடியாத வேதனை

"உசிருக்கும் போராடிக் கொண்டு நாங்கள் வாழுறம்.. என்னவோ தேடுறம் தேடுறம்னு ஆமிக்காரனுக வந்து அடிக்கிறதும் உதைக்கிறதும்... அதுவும் கூட செல்லத்துரை ஐயாவூட்டு கமத்துல மாட்டாங்க எங்கிட்டத்தான் வந்து......... வதைக்கிறானுங்க போய்த் தொலைங்கடான்னு... எங்க நாங்க போறது". இளைஞனொருவன் விலத்திக் கொண்டு முன்னுக்கு வந்தான்.

"ஆமிக்காரங்கள விடுங்க.. அவனுகளை நிரபராதிங்களை அப்பாவிங்கள அடிச்சு நொறுக்குறதுக்குன்னே சம்பளம் குடுத்து வைச்சிருக்கானுங்க. இவன் செல்லத்துரையிட ஆக்கள்...... ங்ம" கோபவேஷத்தில் அவன் குமுறினான்

"என்னப்பா......"

"தமிழு தமிழுன்னு ஒண்டாகனும்றாங்க... ... அதே தமிழன்... ... செல்லதுரை வீட்டுக்கு உதவின்னு வந்த காவாலி......"

"அத சொல்லிறியா" என்று கிழவன் கண்களைத் துடைத்தான்.

எல்லாரும் சோகத்தின் உச்சியில் நின்றார்கள். இளைஞன் தொடர்ந்தான்.

"அவ வள்ளி புருசனை இழந்துட்டு ரெண்டு பிள்ளையளோடு அல்லாடி சீவிச்சவ..... இவன் செல்லத்துரைதானே வழி காட்டினவன். எலும்புத் துண்டை நீட்டினான்........ வள்ளி நாயில்ல பொண்ணு. நீயாருன்றாள. அவன் காவாலி சாமத்திலையே உண்மையான தீயாக்கி அவ குடிசையை எரிச்சான்......"

"என்னது" இராசையர் விடம் பதட்டம்.

"அவன் தீ தணிந்ததோ என்னமோ அவன் வைச்ச தீ வள்ளியை மட்டுமல்ல ரெண்டு பிள்ளைகளையும்......"

இவர்கள் நெருப்பாகி நின்றார்கள். இங்கேயும் கீழ வெண்மணிகள்...... கிழவனும் அவன் கூட வந்தவர்களும் துயரத்தின் இமயத்தில் நின்றார்கள். இராசையாவும்தான் வேதனையோடு திரும்பி ஐயாமாரைப்பார்த்தான். கனகர் மற்றவர்களின் முதுகில் தட்டி ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார். அவருக்குத்தான் 'ஏத்தம்' அதிகம் போலும்.

இவனுக்கு ஒரு நினைவின் வெறி.
கனகர் போன கிழமை நடந்த பாரதி விழாவில் பிரதம விருந்தினராகப் போனவர். அலுவலக ஜீப்பில் தான் போனவர். "தனி ஒருவனுக்குணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றான் பாரதி. அந்த இலட்சியத்துக்காக பாடுபடுகிறவங்க நாங்க...... நாங்க பாரதியைக் கனம் பண்ணத் தவறமாட்டோம்...... ஜகத்தினை அழிக்காம ஒருவன் கூட உணவில்லாம பரிதவிக்காத நிலைமையை ஏற்படுத்துவோம். அதுதான் நாம பாரதிக்கு செய்யிற அஞ்சலி."

கனகர் பேசியது அது.
இப்போது......

செல்லத்துரை ஜீப்பருகே வருகிறார். இராசையாவை சாப்பிட அழைக்க...... வந்தவர் இவர்களைக் கண்டு ஆவேசம் கொண்டு விரட்டுகிறார்.

"போங்கடா வெளியே, இன்னுமா நிக்கிறீங்க ......... போங்கடா" இவர்கள் துயரத்துடன் திரும்புகிருர்கள்.

இராசையா வயிற்றுக்குள் ஏதோ செய்கிறது என்று செல்லத்துரையரின் உணவை மறுக்கிருன். உண்மையில் மனதுக்குள் தான் ஏதோ செய்கிறது.

"சரி நாங்க புறப்படப் போறம்" என்கிருர்கனகர்.

"நன்றி. மறக்க மாட்டம்" இது பஞ்சர்.

"நீங்களும் கந்தோர்ப் பக்கம் வரவேணும்" தானும் ஏதாவது கூற வேண்டும் என்பதற்காக சிவராசா.

"விதைக்கிழங்கு வந்தால் எனக்குத்தான்........" செல்லத்துரை காரியத்துக்கு வருகிருர்.

"உங்களுக்குத் தராம....."

"அந்த பாங்க் லோனுக்கு சிபார்சு......"

"வாங்க தருகிறன்"

"உரம்"

"ஒழுங்கு பண்ணுறன்"

"எல்லாத்துக்கும் கந்தோருக்கு வாறன்"

"வீட்டுக்கு வாங்க" என்கிருர் கனகர் அமத்தலாக......

ஜீப் உறுமுகிறது.

இராசையா ஆவேசம் பிடரி பிடித்து உந்தியவனுக வேகத்துடன் ஓட்டுகிருன்.

"என்னடாப்பா அவசரம்......" என்கிருர் கனகர்.

"மெல்லப் போ ..... நாங்க ரெண்டு நாள் களையும் எடுக்க வேணுமெண்டு இருக்கிறம்..... .. ...நீ"

ஜீப்பின் வேகம் தணியவில்லை.

அவனிடம் வேறு அவசரம். ஜகத்தினை அழிக்கும் பாரதியின் ஆவேசம்.

அவன் கண் எதிரே அக்கினிக் குஞ்சுகளாக சுற்றி நின்றவர்கள் இப்போதும் நிற்கிருர்கள். எரியப் போகும் காடு.. பூக்கப் போகும் யுகம். அதுவே நினைப்பாகி.........

அவனிடம் பொறி பறக்கும் வேகம்......

"தத்தரிகிட தத்தரிகிட தத்தோம்" பாரதியின் பைலா அவனுள் ஒலித்துக் கொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

(13ம் பக்கத் தொடர்ச்சி......)

மெய்மறந்த சில கணங்கள்!

நவரெத்தினத்துக்கு எதிர்பாராத விருந்து!-எதிர்பாராத அதிர்ச்சி!

நவரெத்தினம் அவ்வீட்டை விட்டுப் புறப்பட்டபோது ஒன்பது மணியாகி விட்டது. நல்லம்மா கண்களில் ஒரு 'மோனலிசா' புன்சிரிப்புடன் வாசல் வரை வந்து கையசைத்து விடை கொடுத்தாள்.

நவரெத்தினம் சைக்கிளில் ஏறி உட்கார்ந்தபோது அவன் மனம் மிகத் தெளிவு பெற்றிருந்தது. வரும்போது இருந்த குழப்பமும் தளம்பமும் இப்போது அவனிடம் இல்லை.

'ஆம்' மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். நிச்சயமாக இவள் என் மனைவியாக இருக்கமுடியாது!'

(யாவும் கற்பனை)

★ ★ ★

உருவகம்

## 'எலிகள்'

**சி. சதாசிவம்**

சந்தடி மிக்க அந்நகரின் மத்தியில் ஓங்கி உயர்ந்து சடைத்து மதத்து நிற்கின்றது ஒரு மருத மரம். அதனுள் அமைதியான ஒரு இருண்ட பொந்து. அங்கு இரண்டு எலிகள் வாழ்ந்து வந்தன. ஒன்று பெரிய எலி. மற்றது சிறிய எலி.

சிறிய எலி உண்ணும்போது அளவாக உண்டு மிகுதியை நாளைக்கும் வைக்க வேண்டும் என்று சேமித்து வைக்கும். பெரிய எலியோ நாளையைப் பற்றி யோசிக்காது. சிறிய எலி இரக்கமுள்ளது. தன்னைப் பற்றிய சிந்தனை குறைந்தது. பெரிய எலியோ இரக்கமற்றது. தன்னைப் பற்றிய சிந்தனையே கொண்டிருக்கும்.

சிறிய எலி ஆசையை ஓரளவிற்கு அடக்கி அமைதியாக வாழ்ந்தது. பெரிய எலியோ ஆசையால் அலைந்தது. பெரிய எலி சிறிய எலியிடம் வந்து 'இதுதானு உனது உணவு? இவ்வளவுதானு நீ சாப்பிடுவது. எலி மாதிரி கொறிக்கக் கூடாது. என்னைப்போல் நன்ருகச் சாப்பிட வேண்டும்' என்று புத்திமதி கூறும்.

சிறிய எலி சிறிதளவு உணவையே உண்பதனுல் நல்ல சத்துள்ள உணவுகளைத் தேடி உண்டு மிகுதியைச் சேமித்து வைக்கும்.


பெரிய எலி அடிக்கடி சிறிய எலியிடம் வந்து. என்னைப்பார் எவ்வளவு பெரியவன். என்னைப்போல் நன்ருகச் சாப்பிட்டுப் பெருக்க வேண்டுமென்று கூறிச் சிறிய எலி மிச்சப்படுத்தி வைத்த உணவுகள் யாவற்றையும் தின்றுவிட்டுப் போவதுமல்லாமல் அதற்கு அடிக்கடி போதனை செய்து ஏதோ தனது தயவிற்தான் சிறிய எலி வாழ்கிறதென்றும், தான் தான் சிறிய எலியின் இரட்சகர் போலவும் கூறித் தொல்லைப்படுத்தி வந்தது.

சிறிய எலியும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தது. பின் ஒரு நாள் பெரிய எலியைப் பார்த்துக் கூறியது. "நீயும் எலிதான் நானும் எலிதான். இரண்டு பேருமே எலிவர்க்கந்தான். ஆனல் நீயோ வெள்ளெலி நானே சுண்டெலி உனக்கும் எனக்கும் சரிப்படாது" எலி வளையானலும் தனி வளைதான் வேண்டும்" என்று கூறி அமைதியாகப் பிரிந்து சென்றது.

[யாவும் கற்பனை]

# அன்பளிப்பு

—தா. தேவமதுரம்—




புதன்கிழமைகளில் மட்டுமே ஆசிரியர்கள் தங்கள் அலுவல்கள் தொடர்பாகக் கல்வி அலுவலகத்திற்கு வருகைதரமுடியும் என்ற எங்கள் பிராந்தியக் கல்வி அலுவலகத்தின் கட்டளையையும் மீறியவராக ஒரு தமிழ் ஆசிரியர் அன்று பிற்பகல் எனது மேசையை நோக்கி நெருங்கி வந்துகொண்டிருந்தார். தமிழரின் தனிப்பட்ட தேசிய உடையில் தோற்றமளித்த அவர் கரை மடித்த சால்வையும் எடுப்பாகப் போட்டிருந்துடன் கையில் சில பத்திரங்களையும் வைத்திருந்தார். எனது கவனத்தைத் தன்பக்கம் திருப்புவதற்காகத் "தம்பி" என்று குரல் கொடுத்து முகத்தில் ஒரு மெல்லிய புன்னகையையும் இழையோடவிட்ட வண்ணம் நின்றார்.

அவரைப் பொறுத்தவரை அவருடைய பிரச்சினை பெரியது. எவ்விதம் அதை விடுவிப்பது என்று விளங்காத அவநம்பிக்கை அவர் முகத்தில் அப்படியே அப்பியிருக்க அவர் அதைச்சொன்னார்.

சில வருடங்களுக்கு முன்னர் அவர் முதலாந்தரத் தலைமையாசிரியர் பதவி உயர்ச்சி பெற்றதையும் அதற்குரிய சம்பள விகிதமும், சம்பள நிலுவைப்பணமும் இதுவரை கிடைக்காததையும் அப்படியே கூறிவிட்டு அடுத்த மாதச் சம்பளத்தில் அவற்றைக் கிடைக்க வகை செய்ய வேண்டுமென இரந்து நின்றார்.

இது பற்றிப் பல கடிதங்கள் எழுதியும் அவை கவனிக்கப்படவில்லை. தனது பிரச்சினையை நேரடியாக முன்வைக்கவேண்டுமென்ற ஆவலினால் உந்தப்பட்டு வந்ததாகக் கூறி அதற்கான காரியாலயக் கடிதங்களின் பிரதிகள் சிலவற்றையும் என்னிடம் காண்பித்தார்.

அவர் காட்டிய கடிதங்களைப் பார்த்தேன். எனக்கு என்னவோ செய்தது. சாதாரணமாகவே ஏதாவது சால்ஜாப்புச் சொல்லி ஆசிரியர்களைத் திருப்பியனுப்பும், கிளார்க் மனோபாவத்தையும் மீறி அவருக்கு உதவிசெய்யவேண்டும் என்ற ஒரு எண்ணம் மன ஆழத்திலிருந்து மேலெழுந்தது.

ஆறு வருடங்களுக்கு முன் அவருக்கு முதலாந்தர தலைமையாசிரியர் பதவியுயர்ச்சி கிடைத்திருக்கிறது. இன்னும் அதற்கான சம்பள விகிதம் வழங்கப்படவில்லை. இந்த ஆறு வருட காலத்தில் மூன்று மாவட்டங்களில் நான்கு பாடசாலைகளில் கடமையாற்றிவிட்டார். ஒருவேளை இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் நீடிப்பதற்கு இந்த இடமாற்றங்களே காரணமாகவும் இருக்கலாம்.

**இளங்கதிர்.**

ஆனால் எந்தக் கிளார்க்குமே பிரச்சினையை இந்தக் கோணத்தில் அணுகுவதில்லையே. தன்னுடைய சோம்பேறித்தனத்தையும், திறமையின்மையையும் மறைப்பதற்காக, தேவையற்ற கேள்விகளைக் கேட்டு ஆளைமடக்கி அனுப்பி விடுவார்களே!

அவர் சென்றுவிட்டார்.

எனது நினைவுகள் மீண்டும் காரியாலயப் பணிகளில் ஒன்றுபடுகின்றன. எனது மேசைமீது குவியலாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் கோவைகளின் பின்னணியில் அவற்றின் சேவையினை எதிர்பார்த்து ஒவ்வோர் ஆசிரியரும் உள்ளார் என்பதை நான் நன்கறிவேன். எனவே சற்று முன்பு தனது அலுவல் ஒன்றினை என்னிடம் சமர்ப்பித்துவிட்டுச் சென்ற ஆசிரியரின் தேவையைப் பூர்த்தி செய்யக்கருதி அதற்கான அவருடைய கோவையினைத் தேடிக் கண்டுபிடித்து அலுவலைக் கவனிக்கத் தொடங்கிய பொழுது பிறகிளையிலிருந்தும் கிடைக்க வேண்டிய சில விபரங்கள் கிடைக்கப் பெறாமையால் இவ்வாசிரியரின் விடயம் இதுவரை கால தாமதமாகிவிட்டதை அவதானித்தேன். சம்பந்தப்பட்ட கிளையுடன் உடன் தொடர்பு கொண்டு அவ்விபரங்களை ஒன்று சேர்த்து அவருக்குரிய வேதனவிகிதமும் பாக்கிப் பணமும் அடுத்த மாதமே அவருக்குக் கிடைக்கக் கூடியதாக வகைசெய்துவிட்டேன்.

அரச அலுவலகங்களின் பணிகள் பத்திரங்கள் தொடர்பாகவும், திரட்டுக்கள் தொடர்பாகவுமே செயற்படுகின்றன. முக்கிய பத்திரங்கள் சில இல்லாதுவிட்டால் ஒருவரது அலுவல் பல வருட காலம் தாமதமாவதை நான் அனுபவ வாயிலாக நன்கு அறிவேன். அதுபோல் இந்த ஆசிரியரதும் விடயமும் சில வருடங்கள் தாமதமடைந்து விட்டது.

அன்றும் ஒரு புதன்கிழமை பல ஆசிரியர்கள் தமது தேவை

கள் தொடர்பாக எங்கள் அலுவலகத்திற்கு வருவதும் போவதுமாக இருக்கின்றனர். காரியாலயம் மிகவும் சுறுசுறுப்பாகவே இயங்கிக் கொண்டிருக்கின்றது. நானும் அதற்கு விதிவிலக்கானவன் அல்லவே. எனது கருத்தும்கவனமும் என் மேசைமீது விரிந்து கிடக்கும் கோவையிலே ஈர்க்கப்படுகின்றது. "தம்பி" என்ற குரல் எனது கவனத்தைக் கலைக்கின்றது. குரல் வந்த பக்கம் திரும்பிப் பார்க்கின்றேன். ஆம், முன்பு என்னுடன் தமது பிரச்சினையை முன் வைத்த அதே ஆசிரியர் புன்முறுவல் பூத்த முகத்துடன் காணப்படுகின்றார். "தம்பி"! என்று இலேசாக மீண்டும் அழைத்த வண்ணம் என்னை மிக நெருங்கி வருகிறார். "தம்பி"! நீர் செய்த உதவிக்கு நன்றி கூற நேரில் வந்தேன். கன்ரீனுக்கு வாரும் ஒரு தேநீர் குடிப்போம்" என்று பிடிவாதமாக அழைக்கின்றார். நானும் பிடிவாதமாக மறுத்து விடுகிறேன்.

அவரின் தவிப்பு எனக்கு வேடிக்கையாகக் கூட இருந்தது.

சற்றுப் பொறுத்து அவர் தான் அணிந்திருந்த சட்டைப் பைக்குள் தனது கையை இலேசாக விட்டு ஒரு மடித்த கடித உறையை எடுத்து என்னிடம் மிகப்பக்குவமாக நீட்டுகின்றார். அதிர்ந்து போனேன். கடித உறைக்குள் என்ன இருக்கும் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது. சொல்ல முடியாத வெறுப்புடன் அவரை முறைத்துப் பார்த்தேன்.

"ஒன்றும் வித்தியாசமாக இல்லைத் தம்பி! கோபித்துக் கொள்ளாதேயும். நீர் சிரமப்பட்டு வலு கஷ்டப்பட்டு எனக்காக இவ்வுதவியைச் செய்தீர் என்னாலான ஒரு சிறு அன்பளிப்பு........" என்று சொல்லி அவர் தமது வார்த்தையை முடிக்கு முன்னர் நான் திடீரென ஆவேசம் கொண்டவனாக எனது அலுவலகக் கதிரையை விட்டு எழுந்து "மாஸ்ரர் போய்விடும் வெளியே" என்று எனது மனக் கட்டுப்பாட்டை மீறிய நிலையில் உரக்க இரண்டு மூன்று முறை சத்தமிடுகின்றேன்.

எங்கும் நிசப்தம் குடிகொண்டது. அங்குள்ளோர் அனைவரும் எம் இருவரையும் நோக்குகின்றனர். ஆசிரியருக்கு மிகவும் வெட்கமாகவும் வேதனையாகவும் இருந்திருக்க வேண்டும். அவர் கூனிக்குறுகியவராகக் குற்ற உணர்வுடன் எதுவுமே கதைக்கத் திராணியற்றவராய் வெளியே செல்ல முற்படுகின்றார்.

கதிரையில் தொப்பென்று விழுந்த எனக்கு எதுவுமே ஓடவில்லை.

நான் செய்தது சரியா? ஒரு கணம் உணர்ச்சி வசப்பட்டதனால் அந்த அப்பாவி ஆசிரியரின் உள்ளத்தைப் புண்படுத்தி விட்டேனா? நான் அப்படிச் சத்தம் போடாமலேயே தன்மையாகப் பேசி மஸ்டரை அனுப்பி வைத்திருக்கலாமோ?

சொல்லப்போனால் அந்த மாஸ்டரையும் குறைசொல்வதற்கில்லை.

எத்தனையோ அலுவலகங்களில் இது நடைமுறையாக இருக்கலாம். அனுபவசாலிகள் அந்த ஆசிரியருக்கு இப்படித் தான் நடக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கலாம். இல்லாவிட்டால் இப்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் யார்தான் இப்படி அன்பளிப்புக் கொடுக்க முன் வருவார்?

என்னை நானே கடிந்து கொண்டேன் தீர்க்கப்படாமல் இருந்த ஒரு பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம் என்ற எனது மனநிறைவு பறிபோய்விட்டது. அந்த ஆசிரியரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளா விட்டால் அந்த மனநிறைவு எனக்கு மீண்டும் கிடைக்கப் போவதில்லை.

(யாவும் கற்பனை)

O O O

## சுடர் நண்பர் வட்டம்

Ananda Jayaratna
No-74, Main Street,
Puwakpitiya.

பொழுதுபோக்கு: சைக்கிள் ஓட்டம், விளையாட்டுத்துறை, நண்பர் நண்பியர் தொடர்பு, T. V. பார்த்தல்.

T. சண்முகராஜா,
168, குவாறி லேன்,
கல்முனை-2.

பொழுதுபோக்கு: T. V. பார்த்தல், வியாபார தொடர்பு, ஜோக் அடித்தல்.

சாந்தகுமார்.
106, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

பொழுதுபோக்கு: சினிமா பார்த்தல், T. V. பார்த்தல் உதைபந்தாட்டம்.

வை. சி. கிருபானந்தன்.
"துவாரகை"
தெல்லிப்பளை.

பொழுதுபோக்கு: முத்திரை காட்சிப்படங்கள் சேகரித்தல் கரம், வலைப்பந்து

பூ. பகீரதன்.
மே/பா. V. வல்லிபுரம்
குரு வீதி,
காங்கேசன் துறை.

பொழுதுபோக்கு: நண்பர் தொடர்பு, வானொலி, பத்திரிகை டெலிவிஷன்.

தா. குகதாசன்.
கமநலசேவை நிலையம்,
நிலாவெளி.

பொழுதுபோக்கு: ஓவியம் வரைதல், சினிமா, கராத்தே பயிற்சி.

எம். எம். எம். நஜூப்,
ஜாவா ரோட்,
கிண்ணியா-7.

பொழுதுபோக்கு: விளையாட்டுத்துறை, சினிமா, டி. வி. கதை, கட்டுரை.



**நம்பு:** உடம்பு முழுவதும் கவசம் அணிந்துகொண்டு போகிறாரே, அவர் யார்?

**சம்பு:** அவர் தபால் கந்தோரில் பார்சல் கவுண்டரில் வேலை பார்க்கிறார். குண்டுப் பார்சல் வந்தாலும் வரலாம் என்று முன்னெச்சரிக்கையாக...!

* * *

**தபால் அதிபர்:** ஓய்! இந்தப் பார்சலை திறந்து காட்டும்!

**பார்சல் அனுப்புபவர்:** அப்படி நீங்கள் யோசிப்பது போல குண்டு ஒன்றும் இதற்குள் இல்லை ஐயா!

**தபால் அதிபர்:** இல்லை! இல்லை! திறந்து காட்டும்!!

**பார்சல் அனுப்புபவர்:** சரி. இப்போது பாருங்கள் ஐயா!

**தபால் அதிபர்:** பார்சலினுள் இருப்பது லட்டு என்று பார்சலைத் திறக்க முன்னரேயே சொல்லி இருக்கக் கூடாதா?

* * *

**சிறுவன்:** அப்பா குண்டு வாங்கித் தா!

**காவலன்:** உனது பிள்ளை அந்தக் கடையினைக் காட்டிக் குண்டு வாங்கித் தா என்று கேட்கிறான். குண்டு எங்கே இருக்கிறது சொல்லு வா! வா!

**தகப்பன்:** அதோ அந்தச் சாப்பாட்டுக் கடையில் உள்ள அலுமாரியில் இருக்கிறது, பாருங்கோ!

**காவலன்:** அது வாய்ப்பன் பணியாரம் தானே!

**தகப்பன்:** அதைத்தான் எனது பிள்ளை குண்டு என்று சொல்லுகிறான்.

"குன்றுதோருடி"

★ ★ ★

**ஆசிரியர்:** (கோபமாக) டேய்... உனக்கு முதுகெலும்பு இருக்கா?

**மாணவன்:** இல்லை சார்... முதுகெலும்பு இருந்தால் நீங்கள் அடிக்கும் போதெல்லாம் வளைந்து கொடுப்பேனா...?

* * *

**ஒருவர்:** இன்றைக்கு மிகவும் ஆவேசமாகப் பேசி ஜமாய்த்து விட்டீர்களே ஐயா...

**பேச்சாளர்:** வீட்டில் மனைவியோடு சண்டை பிடித்துக்கொண்டு வந்த வேகத்தில் என்னைப் பேச அழைத்து விட்டார்கள்...

* * *

**டாக்டர்:** உன் 'எக்ஸ்ரே' படத்தில் நோய் எதுவும் இல்லையே...

**நோயாளி:** நோய், என் உடம்பிலல்லவா இருக்கிறது டாக்டர்...

**கதிர் மாணிக்கம்.**

★ ★ ★

**குகன்:** "டேய் நீ எத்தினை மணிக்கு காலையிலை நித்திரையாலை எழும்பிறனீ?

**பாலன்:** சரியா ரேடியோவிலை "பொங்கும் பூம்புனல்" தொடங்கும் நேரத்துக்குத் தான்......

* * *

**ஆசிரியர்:** "எங்கே நேற்று பாடமாக்கிக் கொண்டு வரும்படி சொன்ன குறள்களில் இரண்டைக் கூறு?

"மாணவி: யாழினிது குழலினிதென்பர் நம் சங்கீத வாத்தியாரின் குறள் கேளாதவர்...

"அ(ற)த்தான் வருவேதே இன்பம் மற்றெல்லாம்......

**ஆசிரியர்:** ......?......?......?...

* * *

**குழந்தை:** "அப்பா ஆதவன் மாமா இனி எப்போ வருவார்"

**தந்தை:** "இனி நாளைக்குத்தான் ராசா

**குழந்தை:** நான் அதைக் கேக்கேல்லை அப்பா. நீங்கள் கந்தோருக்குப் போனதும் அம்மாவைப் பார்க்கவாற மாமாவை கேட்டனான்."

**தந்தை:** ......?......?...... ?...

**அளவையூர் செல்வி S. கௌரி.**

★ ★ ★

**ஒருவர்:** வருங்காலத்தில் விஞ்ஞான நுட்பங்கள் இப்படி இருக்கும்.

**மற்றவர்:** எப்படி?

**முன்னவர்:** செயற்கைப் புற்தரையில் பிளாஸ்டிக் புழுவை யந்திரக் காகம் பிடிக்கும்.

**குமார் தனபால்.**

★ ★ ★

# ஒரு நூற்றாண்டின் இரு தமிழ் நாவல்கள்

— எஸ். அகஸ்தியர் —

'பிரதாப முதலியார் சரித்திரம்' நாவலில் அதன் ஆசிரியர் திரு. வேதநாயகம்பிள்ளை அவர்கள் தன்னிலைப் பாட்டில் நேராகக் கதையை நகர்த்திக் கலாக்ஷேபம் செய்கின்றார். 'அசன்பே சரித்திரம்' நாவலில் ஆசிரியர் சித்திலெப்பை அவர்கள், எதிர் நிலைப்பாட்டில் கதை மாந்தர்களின் சம்பவ நிகழ்வினூடாகவும், முன்னிலை— தன்னிலைப் பாடாகவும் கதையை ஆலவர்ணமாக நகர்த்திச் சிருங்காரம் ததும்பச் செய்துள்ளமை, ஆசிரியர் தனது முதல் நாவல் இலக்கியத்தில் அடைந்த வெற்றி என்றே கருதுகிறேன்.

'கல்வி செல்வங்களினாலே மிகச் சிறந்து விளங்கா நின்ற மிசுறு தேசத்தின் இராஜதானியாகிய காயீரென்னும் பட்டணத்திலே செய்யிது பாக்ஷா என்பவர் இராச்சிய பரிபாலனஞ் செய்யுங் காலத்தில், அந்தப் பாக்ஷாவினுடைய மாளிகைக்குச் சமீபமான ஓர் அலங்காரமுள்ள மாளிகையில் யூசு பாக்ஷாவென்பவரொருவரிருந்தார் ?

சப்புச் சல்லடைகளோ, வெறுஞ் சல்லாபங்களோ, வீண் சலசலப்போவின்றி, கதை நேரடியாகவே நாவலில் இப்படி ஆரம்பமாகின்றது. இதனால் வாசகன் தங்கு தடையின்றி உற்சாகத்துடன் நாவலைப் படிக்கும் ஆவலால் தூண்டப்படுகின்றான். நாவல் ஆசிரியன் கவனிக்க வேண்டிய ஓர் முக்கிய அம்சம் இது. இதிலும் சித்திலெப்பை ஓர் எழுத்தையோ, வசனத்தையோ, பின்னலையோ, கதை சொல்லும் மொழிபாவ நடையைத் தேவையின்றிக் குறுக்கிட விடாமையால் நாவல் வாசிப்பிலும் நடையலங்காரத்திலும் வனப்புக்கொண்டு வேகமாக அழகாகவே ஓடுகின்றது. நூறு ஆண்டுகளுக்கு முன் ஈழத்தில் இப்படிப் படிமம் வைத்து எழுதிய ஆசிரியர் சித்திலெப்பை, ஈழத்து நாவலாசிரியர்களுக்கு முன்னோடியாக மட்டுமன்றி வழிகாட்டியாகவும் விளங்குகின்றார் என்பது என் கணிப்பு. எனினும், 1879ல் வெளிவந்த திரு. வேதநாயகம்பிள்ளையின் 'பிரதாபமுதலியார் சரித்திரம்' நாவலைக்காட்டிலும், பதினேழு ஆண்டுகளுக்குப் பின் 1896ல் வெளியான திரு. இராஜம் ஐயரின் 'கமலாம்பாள் சரித்திரம்' நாவல் சமூகவியல்புகளைச் சிலாகித்துத் தாவியதோடு இலக்கியத் தாக்கத்திலும், இலக்கிய வளத்திலும், இலக்கிய ஆளுமையிலும் பெற்ற வெற்றியை — நாவலின் தன்மையை 'அன்றைய சமகால நாவல்' என்று குறிப்பிடும் ஜனாப் சித்திலெப்பையின் 'அசன்பே சரித்திரம்' நாவலில் அவ்வளவாகக் காணமுடியவில்லை. ஆசிரியர் அவர்கள் இலங்கையின் மத்திய மாகாணத்தைச் சார்ந்த கண்டி மாநகரத்துச் சூழலில் வாழ்ந்தபோதும், அவரின் 'அசன்பே சரித்திரம்' களத்தின் கதாநாயகர்களும், களமும் ஈழத்து மண்ணை மட்டுமன்றிப் பொதுவாகப் பிறதேசத்தின் எந்த மண்ணையும் பாவாதவர்களாக - தூரத்துப் பச்சைபோல் அந்நியப் பிறவிகளாக உலவுவதே இதற்குக் காரணம் என்று தோன்றுகின்றது.

'ஜனாப் சித்திலெப்பையின் நாவலை வாசித்து முடிக்கும்போது, இந்நாவலுக்கு 'அசன்பேயின் திகைப்பூட்டும் நூதன' சாகசங்கள் என்று தலைப்பிட்டிருக்கலாமென்றே நினைக்கத் தோன்றுகின்றது. கதையின் உள்ளடக்கமும் கதைப்போக்கும் அவ்விதமே எண்ணத்தக்கதாக அமைந்துள்ளது. கதாநாயகன் மத்திய கிழக்கு, இந்தியா, ஐரோப்பா ஆகிய நாடுகளுக்கெல்லாம் செல்கின்றான்' என்று இந்நூலுக்குப் புதிய அணிந்துரையளித்த எஸ். எம். கமாலுதீன் அவர்களின் குறிப்பும் கவனிக்கத்தக்கது.

'திகைப்பூட்டும்', நூதன 'சாகசங்கள்' ஆகிய பதப்பிரயோகங்களில் உள்ள அர்த்தங்கள், சமூக யதார்த்த நாவல்களுக்குப் புறம்பானவையும், மர்ம நாவல்களின் தவிர்க்கவொண்ணாத செயற்கையான-அதீத கற்பனை அம்சங்கள் என்பதனையும் இலக்கிய உலகம் கண்டு தீர்த்துள்ளது. இச் செயற்கை அம்சங்களே சமூக யதார்த்த இலக்கியத்தின் பிறழ்வுக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாகின்றன. இராஜம் ஐயரின் 'கமலாம்பாள் சரித்திரம்' நாவலில் உள்ள இலக்கிய வளமும், இலக்கிய வனப்பும், வேதநாயகம்பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்' நாவலிலும், சித்திலெப்பையின் 'அசன்பே சரித்திரம்' நாவலிலும் காணமுடியாதிருப்பதற்குக் காரணம்,

கதையில் நடமாடும் கதாபாத்திரங்கள், பாத்திரங்களின் குணவியல்புகளுக்கப்பால் வார்க்கப்பட்டு அவை செயற்கைச் சித்திரங்களாக உருவாக்கப்பட்டதே எனலாம்.

நாவல் இலக்கியம் அதன் களத்தில் முழுமையான ஆள்கையுடன் விஸ்தரித்து நிற்பதுடன், சிருஷ்டித்தரத்தில் அது 'சரித்திரம்போல்' திகழ்வதேயன்றி, 'சரித்திரமாக' விருப்பதன்று; சரித்திரமாக விளங்கும் நாவல் சமூக இலக்கியச் சிருஷ்டியுமன்று.

ஜனாப் சித்திலெப்பையின் நாவலும், திரு. வேதநாயகம்பிள்ளையின் நாவல் போன்று, ஏதோ ஒரு சரித்திர ஓட்டமாகத் திகழ்கிறதேயன்றி சமூக ஆக்கவிலக்கியத்திற்கான யதார்த்தபூர்வச் சித்தரிப்பின் பாணியோ அன்றேல், இழையோட்டலோ முறையாகப் பின்னப்படவில்லை என்றே கூறலாம். 'திகைப்பூட்டும் நூதன சாகசங்கள்' போலவே நாவலின் கதையும், கதைமாந்தர்களும், சம்பவப் புணர்வுகளும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

கதை, களம், கதாபாத்திரம், பாத்திரக் குணவியல்பு, சம்பவக்கோர்வை ஆகியவற்றை இதில் நோக்குமிடத்து, மேற்கூறிய தாற்பரியம் புரியும். இதின் கதை சம்பவங்களின் நிகழ்வினூடாக இவ்வாறு புணர்ந்து விரிகின்றது.

புத்திரபாக்கியமின்றித் தவமிருந்த யூசுபாக்ஷா தம்பதிகளுக்குப் பத்துவருஷங் கழிந்து ஓர் ஆண் மகவு பிறக்கின்றது. பிறந்த பதினான்காம் நாள் அக்குழந்தையைத் தாதிகள் வெளி மண்டபத்துள் வைத்துச் சீராட்டிக்கொண்டு வேறு பராக்கில் இருந்தனர். திரும்பிப் பார்க்கும்போது குழந்தையைக் காணவில்லை. மறுநாட்காலை அக்குழந்தை சேலைப்புடவையால் சுற்றப்பட்டு, மாளிகையில் கிடக்கிறது. இது இவ்விதமிருக்க, குழந்தை திடீரெனக் காணாமல்போன மூன்றாம் நாள், அபிஷிகுடும்பத்தினர் ஒரு குழந்தையைப் பம்பாயிலுள்ள அறபியான ஜகுபருல்மத்னீ—ஆயிஷா குடும்பத்திடம் ஒப்படைத்துவிட்டு, 'எப்போதும் குழந்தையின் சுக, சேம, நலன் பற்றித் தகவல் தந்துகொள்ளல் வேண்டும்' என்று கூறிச் செல்கின்றனர்.

இக்குழந்தை தங்கள் வசமிருப்பின் பிறர் பொறாமை கொண்டு துன்பஞ்செய்ய நேரிடுமென அஞ்சியதால் ஜகுபருல்மத்னீ ஆயிஷா தம்பதிகள், 'சூரத்து' என்னும் ஊர் சென்று வசிக்கின்றனர். இத்தம்பதிகளிடம் சூரத்து ஊரில் வளரும் குழந்தையே அசன்பே.

அஸன் ஆறாம் பராயத்திலிருக்கும் போது ஒரு நாள் ஓர் அறபி திடீரென வந்து ஆயிஷாவைச் சந்தித்து உரையாடுகின்றான். இதனைச் சந்தேகத்துடன் கவனித்த அஸன் மௌனமாக இருந்து கொள்கிறான். பத்து வருஷம் கழிந்து அஸன் பதினாறாம் பராயத்தினனான போது ஒருநாள் அதே அறபி ஒரு கடிதத்தை அஸன் பார்த்துக்கொண்டிருக்கையிலே ஆயிஷாவிடம் கொடுக்கின்றான். அக்கடிதத்தைப் பார்த்தமாத்திரத்தில் ஆயிஷா அதிர்ச்சியினால் மூர்ச்சித்து விழுகின்றாள். மனைவி ஆயிஷாவின் இந்நிலை கண்டு அதிர்ச்சியடைந்த புருஷன் ஜகுபர் அந்தக் கடிதத்தை வாசிக்கின்றான். மனைவியிற்கொண்டிருந்த பச்சாத்தாபம் கடிதம் வாசித்ததும் கோபாக்கினியாகிவிடுகிறது.

ஆயிஷாவை 'வஞ்சகி - துரோகி' என்றெல்லாம் ஆக்ரோஷமாகத் தூஷித்துவிட்டு, ஜகுபர் சித்தங் கலங்கினவனாய் ஆற்றுக்கரையோரம் ஓடுகின்றான். 'ஓடியவன் ஆற்றிலே விழுந்து இறந்துவிட்டான்' என்று ஊர் மக்கள் யூகித்து முடிவு கட்டுகின்றனர். 'புருஷன் இறந்துவிட்டான்' என்ற அவச் செய்தியால் மீண்டும் அதிர்ச்சிக்குள்ளான ஆயிஷா உண்மையில் மூர்ச்சித்து இறந்தேபோய் விடுகின்றாள்.

கதை ஆரம்பித்து ஆயிஷா இறந்தவரை இப்படிப் பல்வேறு தினுசாக - மர்மங்களடங்கிய நிகழ்வினூடாக நாவலை வளர்த்து ஆசிரியர் வாசகர் மனசைப் பிரளயம் கொள்ளச் செய்துள்ளமை கவனிக்கத்தக்க அம்சம். ஒரு கணம் அந் நிகழ்ச்சி நமது நெஞ்சை உண்மையில் நெகிழவைத்தே விடுகின்றது.' அச்சம்பவத்தை நெஞ்சிலாழ்த்தும்படி இவ்வாறு ஆசிரியர் சித்திரிக்கிறார்:

'ஜகுபருடைய மனைவியோ சற்றுநேரம் நினைவற்று மயக்கமுற்றுப் பின்னர் தன்னறிவு நிலைத்துத் தலையுயர்த்தித் தாவி, வெகு ஆவலாய்த் தனது புருஷனைப் பார்த்தாள். அவரைக் காணாமையால், ஆவெனப்பதறிக் கோவெனக் கதறி அவ்விடத்திலிருந்தவர்களைக் கேட்க, முன்னரவர் துக்கத்தினால் யோசித்ததையும், பின்னர் அக்கடிதத்தை வாசித்ததையும். பின்பு வீட்டைவிட்டு வேட்டை மான் போல் ஓடின செய்தியையுஞ்சொல்ல, அவள் கேட்டு, 'அல்லாகூ! அல்லாகூ! என் கர்த்தாவே என் பத்தாவெங்கெனச் சத்தமிட்டுத் தலையணையின் மீது பொத்தென விழுந்தாள்......

'சுற்றியிருந்தவர்கள் போய்ப்பார்க்கப் பொட்டென அவள் உயிர் போயிருக்கக் கண்டார்கள்'

கவிதை நயத்தோடு ஆசிரியர் இதனைக் கூறும் விதம், கல்நெஞ்சையும் கரைந்துருக வைத்து விடும் தன்மையுடையது.

ஆயிஷா என்ற பேதை மாது இப்படி அவலமாக உயிர் துறக்கக் காரணமாகவிருந்த அந்த அறபிமீது நமக்கு ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் வெறுப்பையும் உண்டாக்குவதுடன், 'அந்த அறபியின் உயிரையே எடுக்க வேண்டும்' என்கிற ஒரு கிளர்ச்சியையும் வாசகனுக்குத்தூண்டும் முறையில் ஆசிரியர் சித்திலெப்பையின் அற்புதச் சித்திரிப்பு அமைந்துள்ளதல்லவா?

[தொடரும்]

# எதிரொலிகள்

## பெண்பிரமாக்களும் தரமானவர்களே!

பெண் எழுத்தாளர்கள் பற்றிய திரு. ஜெகநாதனின் கருத்தைச் சுடரில் பார்த்து நானும் அதிர்ச்சியடைந்தேன். பெண் எழுத்தாளர்களைச் சேர்த்துக்கொண்டு நாவல் எழுதி, சிறுகதைத்தொகுதி வெளியிட்டு பெண் எழுத்தாளர்களையே அறிமுகப்படுத்திக்கொண்டு திரிந்த ஜெகநாதனுக்கு பெண் எழுத்தாளர்கள் மீது திடீரென இத்தனை வெறுப்பு வர, அவர்களில் தரமானவர்கள் எவரும் இல்லை என்ற 'ஞானம்' பிறக்கக் காரணம் என்னவென்று சிந்தித்ததுண்டு!

வெறும் கற்பனாவாதமுள்ள நடைமுறை வாழ்க்கையோடு தொடர்பற்ற, அல்லது தனி மனித உணர்வுகளின் வெளிப்பாட்டுக்குத் திறவுகோலாயிருக்கிற, பயனற்ற சொல்லடுக்குகளை எழுதித் தள்ளுகின்ற எழுத்தாளர்களைவிட. சமுதாயத்தை அக்கறையோடு நோக்கி அங்கே புரையோடிப் போய்க் கிடக்கின்ற சமூகப் புண்களைக் கீறிக் கிழித்து மருந்திடுகின்ற 'வைத்தியர்கள்' ஈழத்துப் பெண் எழுத்தாளர்களிடையே நிச்சயமாக இருக்கத்தான் செய்கிறார்கள்! இந்த உண்மை எவராலும் மறுக்க முடியாத ஒன்றாகும்!

— மண்டூர் அசோகா

## 'தரம்' என்றால் அது என்ன?

'ஈழத்தில் ஆழமான-கனமான படைப்புக்களை சமூக நோக்கோடு எழுதும் தரமான பெண் எழுத்தாளர்கள் இல்லை'' என்று சொல்வதற்கு காவலூர் ஜெகநாதனுக்கு என்ன தகுதி இருக்கிறது? ஆழம் - கனம் - தரம் என்று இவர் எதைக் கருதுகிறார்? மண்ணைக் கொத்துவதையும்-புல்லைப் பிடுங்குவதையுமா? அல்லது சீதனம் வாங்கக் கூடாது என்று சமூகத்திற்கு பிரசங்கம் செய்து விட்டு ... இலட்சக்கணக்கில் பணத்தை வாங்கிக்கொள்வதையா? எதை இவர் 'தரம்' என்கிறார்? உண்மை தான்! தாயையும் மகனையும் கட்டிலில் சந்திக்க வைத்து 'தரமான' கதை படைக்கும் இவரின் தரத்திற்கு - ஈழத்துப் பெண் எழுத்தாளர்களால் எழுத முடியாது தான். ஒத்துக்கொள்கிறோம்.

பெண்களின் எழுத்துக்கள் எப்படியிருக்கிறது? என்று சொல்ல வேண்டியவர்கள் ஈழத்து விமர்சகர்கள். வாசகர்கள்! வேண்டுமானால் பெண் எழுத்தாளர்களின் படைப்புக்களுடன் தன் படைப்புக்களையும் விமர்சகர்கள் மத்தியில் போட்டிக்கு நிறுத்திப் பார்க்கட்டும். 'தரம்' யாருடைய படைப்புக்களில் கூடுதலாக இருக்கிறது எனப் பார்க்கலாம். அதிகம் ஏன்? இவரின் படைப்பு என்றாவது 'நாவல்' ஆகும் தரத்தை எட்டியதா? இல்லையே இவர் குறிப்பிட்ட தாமரைச் செல்வியின் 'சுமைகள்' நாவல் தரமான ஒரு சிறந்த படைப்பாக விமர்சிக்கப் பட்டதை இவர் மறந்து போய் விட்டாரா? ஏன்? எல்லாவற்றிலும் மேலாக 1980ல் சுடர் நடாத்திய சிறுகதைப் போட்டியில். இவரின் சிறுகதை, தாமரைச் செல்வி, கோகிலா மகேந்திரன், தமிழ்ப்பிரியா ஆகியோரின் கதைகளின் தரத்திற்கு கீழேதான் நின்றது. நிலைமை இப்படியிருக்க - பெண் எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் பிரசுரிப்பதால் சுடரின் தரம் குறைகிறது என்று தலையில் கை வைத்துக் கதறுகின்றார். இந்த ஜெகநாதன். பெரும் பரிதாபம்தான்!

திருமதி பாரதி சிவராஜா,
காரைநகர்

## '100 ஆண்டுகள்' என்பதும் சரியே'

பாரதி ஆய்வரங்குத் தொகுப்புக்கண்டேன் 'நூறு ஆண்டுகள்' என்பதனைப் பண்புடன் சுட்டிக் காட்டினார் வாசகர் கலையரங்கள். பிழையோ சரியோ அவருக்குப் பாராட்டுகள் .

பாவம், காவலூர் ஜெகநாதன்! அவலை நினைத்து உரலை இடிக்கிறார், ஆட்டைக்கடிச்சு, மாட்டைக்கடிச்சு... .....!என்றுஇவருக்குஎன்ன சிக்கல்?

ஒரு வாக்கிய ஆராய்ச்சியில் கட்டுரைசம்பந்தப்பட்டமூவருக்கு 'பாரதி பற்றிய அறிவு நிறைவாக இல்லை' எனும் பெரும்முடிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். இவருக்கு நோபல் பரிசொன்று கொடுக்கலாமே. நீரைப் பிரித்துப் பாலையுண்ணுமாம் அன்னம். குற்றங்களைப்பற்றிக்குணங்களை விடுமாம் - பன்னாடை. நன்னூலாரே பன்னாடை எனக் கூறும்போது நாமென்ன செய்யலாம்: கடின வார்த்தைகளைப் பிரயோகிக்குமளவுக்கு ஏற்பட்ட உளவி

யல் தாக்கம் என்ன? கட்டுரைக் கருத்துக் களில் ஏதோ ஒன்று இவரது முற்போக்குக ளிலும் முற்போக்காகப்போய் விட்டதா? யாரும் தாய்மார் ஒன்றேகால் லட்சம் சீதனம் வாங்கி யாராவது மணமகனுக்குக் கொடுத் திருப்பார்களா? இதற்கு உளவியல் ஆராய்ச்சி தான் தேவை.

நூறு ஆண்டுகள் அண்ணளவாகப் பொருந் தும் என்பது பொருத்தமானது. பாரதி 7 வயதிலே கவிதை புனைந்தான். 10 வயதிலே புனித காதல், 11 வயதிலே பாரதிபட்டம், 15 வயதிலே திருமணம். சொக்கன் போன்ற பல கட்டுரையாளர் அவரது கருவிலேதிருவை யும், உள்ளொலியையும் அறிவு முதிர்ச்சியை யும் பரக்கக் கூறியுள்ளனர். அன்றைய பெண் ணின் அவல நிலையை 5 வயதிலேயே புரிந்து கொண்டிருப்பாரே, பாரதி. 11 வயது என எடுத்துக்கொண்டாலும் 100-11=89 வருடம் எனத்திட்டவட்டமாக எழுதவேண்டுமாக்கும். அப்படியாயின் இவருக்கு 'கணித அறிவு இல்லை' எனவும் சாட்டலாம். 2000 ஆவது ஆண்டுவரு முன்பே 20ம் நூற்றுண்டு என அழைக்கிறேமே, அதுபோல் 89 வருடங் களை 100 ஆண்டுகள் என்று குறிப்பிட்டதிலும் தவறில்லை.

'முகவுரையை வேண்டாத வர்ணனை எனக்கூறிய அவரை நினைக்க வேடிக்கையாக வுள்ளது. பேட்டி கண்டவர் எடுத்துக்கொண்ட குறிக்கோளைப் புரிந்துகொள்ளும் எளிமை யான அறிவுகூட இல்லையா? பெயர் பெற்று வாழும் பெண்களின் வீடுகள், நாற்றமடிக்கக் கூடும் எனச் சாதாரண மக்கள் கருதக்கூடும். அதற்கான முகவுரை அது. முன்பின் அறியாத ஊருக்குச்செல்லும் கன்னிப் பெண், விட்டு உபசரிப்பு, கணவன் பிள்ளைகள் நிலை, கல்விச் செல்வம் முதலியன கருத்தில் கொள்ளப்பட் டால் கொள்கையளவில் மாத்திரமல்ல, பெண் விடுதலை நடைமுறையிலும் வெற்றிகரமா னதே என மக்கள் உணர முடியும் எனப் பேட்டியாளர் கருதியிருக்கலாமல்லவா! அதி லும் இந்த ஜெகநாதன் வேண்டாத வர்ணனை என்று குறிப்பிட்டுள்ளதுதான் ஆக நகைப்பிற் குரியது. இவரின் ஞாபகசக்தி பெலவீனமான தென்றுல்.......... மற்றவர்களையும் அப்படியே நினைத்துக்கொண்டாரா? ஈழநாடு வாரமல ரிலே இளைய தலைமுறை எழுத்தாளர்களை அறிமுகம் செய்கிறேன் என்று............ இவர் நடாத்திய தில்லுமுல்லுக்களை இவரே மறந்து பாய் விட்டாரா?

**ஆர் கலாவாணி.** யாழ்ப்பாணம்.

## உங்களுக்கு தெரியுமா?

* சிக்காக்கோவைச் சேர்ந்த ஜெக் பெட்டி தம்பதிகள் விடுமுறையை கழிக்க ஒற்றை இயந்திரம் பொருந்திய விமானத் தில் 48 நாட்களில் சென்று வந்தனராம்.

* அமெரிக்காவைச் சேர்ந்த ஜேம்ஸ் வாஸ்டர் வில்சன் (1825 - 1945) 120 வருடங்கள் வாழ்ந்தார். அவர் வாழ்ந்த நாளில் ஒருபோதும் சுகயீனமுற்று வைத் தியரிடம் போனதில்லையாம்.

* உலகப் புகழ் பெற்ற பிரான்ஸ் நாட்டு சிற்பி அகஸ்டி ரொடின் (1848 - 1917) கலைக்கல்லூரி பரீட்சையில் மூன்று முறை தோல்வி அடைந்தவராம்.

**—தமிழ்நாதன்—**
செட்டிகுளம்

## தமிழ்ச் சாதி ஒரு புதுக்கவிதை !

நீரிலே சிறிய அமீபமாய்த் தொடங்கி
ஐதரா, அரக்னிடா, அனிலிடா வாகி
மா சூப்பியலாய் மடியில் மழலை சுமந்து
கொரில்லாவாகிக் கூனலும் கலைந்து
மானிடமாக மலர்ந்த உயிரினம்
கண்ட கவிகளில் தமிழ்ச் சாதி ஒரு
புதுக் கவிதை !

பெற்றேல் ஊற்றி நெருப்பில் எரிக்கினும்
பெண்டிர் தமது கற்பே மடியினும்
ரெயிலிலே அடியும் உதையும் பட்டு
துடித்துப் பதைத்து உடைமை இழக்கினும்
வீடு வாசல் எல்லாம் இழந்து
கோயில் ஒன்றில் அகதியாய்ச் சேரினும்
போக்கிடம் தெரியாது புலம்பும் சாதி
பாவம் இந்தப் பழம் பெரும் சாதி
விதியே இவர்களை என் செய நீயும்
எண்ணியுள்ளாய் ?

**—கோகிலா மகேந்திரன்—**

# உலகத் தமிழ்க் கவிதைத் தொகுப்பு

## ஒரு கன்னி முயற்சியின் அறிமுகம்

—நந்தனா—

மதுரையில் நடைபெற்ற உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு வேளை உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? என்கிற மாதிரியான ஒரு தமிழ் எழுத்தாளர் பட்டியல் நூலாக வந்தது. அந்நூலில் ஈழத்து எழுத்தாளர் பெயர்களில் அகஸ்தியர் பெயரும் வந்தது. கோனாமுல்ல அப்துல் காதரும் வந்தது. அகஸ்தியர் சரி கோனாமுல்ல எதில் சேர்த்தி. ஈழத்தின் பெரும்பாலான எழுத்தாளர்களின் பெயர்கள் இடம் பெறவில்லை. ஆனால் கோனாமுல்லகள் சிலவும் இடம் பெற்றன. இவர்கள் தானா ஈழத்தில் என்று யாருமே துள்ளிக் குதிக்கவில்லை. அதுவும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் — இலங்கையிலும் ஒரு பெரிய கிளையைக் கொண்டது. வெளியிட்ட தொகுப்பிலேயே இப்படி!

தமிழிலே ஆர்வம் மிகக்கொண்ட அழகாபுரி அழகுதாசன் 'செம்மாங்கனி' என்கிற உலகத் தமிழ்க் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு நூலை வெளியிட்டு உள்ளார். அதில் ஈழத்துப் பகுதியில் சிறந்த கவிஞர்களில் ஒருவரான ஜீவா ஜீவரத்தினமும் எழுதியிருக்கிறார். கங்கைவேணியன் என்கிறவரும் எழுதியிருக்கிறார். புரிந்து கொண்டுதான் எதையும் எதிர்நோக்க வேண்டும். நிறுவனமாக இல்லாமல் தனிமனித முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட (பத்திரிகை அறிவிப்பில் சேர்க்கப்பட்ட) இந்த தொகுப்பு கிடைத்த கவிதைகளைக் கொண்டுதான் சேர்க்கப்பட முடியும்.

தமிழாராய்ச்சி நிறுவனம் என்றால் வாய் திறக்கப்படாது.

அழகுதாசன் என்றால் வாடா விளாசுறேன் என்பது — சுத்தமான அநாகரீகம்.

ஈழத்துப் பகுதிதரமான கவிதைகள் இல்லை என்பதற்கு அதன் கவிஞர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். தரமில்லை என்று துள்ளிக்குதிக்கிற தம்மைப் பெரிய கவிஞர்கள் என்று தாமே நினைத்திருப்பவர்கள், கவிதை கோரிய அறிவிப்பைப் பார்த்து ஏனோ தானோ என்று விட்டவர்கள் இப்போது தரம் பற்றி துள்ளிக்குதிப்பது மிகவும் கீழ்த்தரமான மனோபாவம்.

கவிதைகளைக் காலத்தின் சிறந்த கண்ணாடி என்கிறோம்... ஈழத்துப்பகுதியில் முறுக்கான கவிதைகள் எதுவுமின்றி வெறும் புலம்பல்களாக இடம்பெற்றுள்ளது. - அதுவும் ஈழத்துக் கவிதைத்துறையின் வளர்ச்சி பற்றி அயல் நாட்டவர் கூட பிரமிப்பு கண்டு விம்மிதம் கொள்கிறவேளை — இவ்வளவு தானா ஈழம் என்று எண்ணி நகையாடுகிற வகையில் தமிழகத்தில் ஒரு தொகுப்பு வெளிவந்திருப்பது கோபத்தைக் கிளறுவது தான்.

ஆனால் இந்த முயற்சியை நாம் இவ்வளவாக மட்டுமே நோக்கக்கூடாது. அவ்வாறு நோக்கி ஒரேயடியாக தாக்கிவிடக் கூடாது.

கவிஞர் அழகாபுரி அழகுதாசன் மிகவும் நல்ல ஒரு நோக்கில் உலகெங்கும் சிதறிக் கிடக்கிற தமிழ்க் கவிமணிகளை ஒன்று சேர்த்து தமிழுக்குத் தர வேண்டும் என்ற பேராசையில் அதுவும் சிரமமான இம்முயற்சியை தனது அயராத உழைப்பினால் செய்து முடித்திருக்கிறார். அக்கரையிலிருந்து அவருக்குக் கிடைத்த கவிதைகளைத் தொகுத்திருக்கிறார் பராட்டுவோம்.

ஈழத்துக் கவிதையின் சிகர முயற்சிகளை அவர் ஏற்கனவே அறியாமல் இருந்ததும் அறிந்தவர்கள் வாய்மூடியிருந்ததும் இத்தகைய தவறு நேர்ந்ததற்குக் காரணமானது. விளைவாக கல்முனை இராசம்மாவும், இரத்தினசிங்கனும் போன்றவர்கள் 'சிறந்த' கவிஞர்கள் என்று குறிப்புப் பெற முடிந்திருக்கிறது.

ஈழத்துப் பகுதியில் மட்டும்தான் இப்படி என்றில்லை. தமிழகப் பகுதியிலும் புதிய வீச்சுகளும் ஆளுமையும் கொண்டவர்களாக நாமறிந்த பல கவிஞர்களின் படைப்புக்கள் நூலில் இல்லை. பழமையின் பாண்டல் பற்றிய மரபுகள் பீடித்துள்ள பலரே இடம் பெற்றுள்ளார்கள். மலேசியாவின் கவிதைத் துறையே நூலில் உள்ளவாறான போக்கில் தான் நிதர்சன நிலையே இருக்கிறது. அங்கும் காரைக்கிழார் போன்ற முன்னணிக்கவிஞர்கள் விடுபட்டுள்ளார்கள்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது இந்தப் பழைய கவிதைகளின் தொகுப்பானது: 82க்குப் பொருத்தமில்லாதது. ஆனால் இந்த முயற்சி ஒரு மனதாகப் பாராட்டப்படவேண்டியது. எனவே எதிர்காலத்தில் இது போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது முதல் நூலின் பாடங்கள் கவனத்தில் எடுக்கப்படுவது நல்லது.

செம்மாங்கனியின் குறைகளிலிருந்து பெறப்படுகிற திருத்தங்கள் என்று பின்வருவனவற்றைக் கூறலாம்.

கவிதைகள் காலத்தின் கண்ணாடி என்றால் சமகால சமூகப் பிரச்சினைகளையும் தமிழர் பிரச்சினைகளையும் விலக்கி கவிதை பண்ண முடியாது. வெறுமனே முகிலையும் வானத்தையும் பாடுவது வேடிக்கையாக முடியும். சமகால ஈழத்துக்கவிதைகள் எரியும் பிரச்சனைகளில் புடமிடப்படுபவை. அதெல்லாம் ஒண்ணும் வேணாம். வானமும் மேகமும்தான் வேணும் என்றால் ஈழத்துப் பகுதியையே விட்டுவிடலாம். கங்கைவேணியன் வகையறாக்களால் ஈழத்துக் கவிதைத்தாய் முகத்தில் கரி பூசவேண்டாம்.

உயிர்த்துடிப்பான ஈழத்துக் கவிதைகளைச் சேர்ப்பதாயின் பொறுப்பாக அவை சேகரிக்கப்பட்டு - கிடைத்தவற்றைப் போடுவது என்றில்லாமல் தேர்ந்து போடுவது என்ற முறையை கடைப்பிடிக்கவேண்டும். மலேசியாவில் போல் ஈழத்துக்கும் பொருத்தமான ஒரு தொகுப்பாளர் நியமித்தல்வேண்டும்.

சொற்பொழிவாளர், துடிப்புமிக்கவர், ஏராளமான, உயர்ந்த சிந்தனை, தலைசிறந்த கவிஞர் என்றவாறான குறிப்புக்களை கவிதை அனுப்பியவரின் தகவலாக இல்லாமல் பொறுப்புவாய்ந்த தொகுப்பாளரின் குறிப்புகளாக அமைவது நல்லது.

இத்தகைய உயர்ந்த நோக்கம் கொண்ட நூல்கள் சிறந்த அச்சுப்பதிப்பு பாத்திரமான நூலாக்கம், ஒருங்கமைப்பு வாய்ந்தவையாக இருக்கப்பெறுவது அவசியம்.

இவையாவும் எதிர்காலத்தில் இத்தகைய முயற்சி குறைதவிர்த்து வெளிவர வேண்டும் என்கிற பேரவாவினால் மட்டுமே எழுந்தவை.

கவிஞர் அழகாபுரி அழகுதாசன் வயதால் மிகவும் இளையவர். உற்சாகத்தோடு காரியமாற்றுவதில் வல்லவர். அவரது எனக்காக ஒருவன் என்கிற கவிதையும் இடம்பெற்றுள்ளது. அக்கவிதையில் ஓர் அடி 'கரும்பு போலிருக்கும் விருந்து பலபடைத்து வருந்தி அழைக்கின்றவன்'.

**செம்மாங்கனியும் ஒரு விருந்துதான்.**
**அடுத்த தொகுப்பு குறையில்லாத பெருவிருந்து ஆகட்டும்.**

இன்னும் ஓர் அடி. 'சங்கம் பல கண்ட தங்கத் தமிழ் வாழத் தன்னைக் கொடுத்தானவன்,

தங்கத்தமிழ் வளர்க்க தன்னை அர்ப்பணித்து செயல்படும் அழகுதாசனைப் பாராட்டுவது - உழைப்பைப் பாராட்டுவதாகும். அதுவே உள்ளத்தையும் பாராட்டுவதாக-அடுத்த தொகுப்பு வெளிவரவேண்டும்.

கன்னி முயற்சியைக் கசப்புகளை மறந்து வாழ்த்துவோம்.

---

(இலக்கியச்சோலை தொடர்ச்சி.........)

## ○ பூபாளம் ○

கவிதைகள் மட்டும் உள்ளடக்கிய ஒரு கவிதையேடு இதுவரை இலங்கையில் வெளிவரவில்லையே என்ற கவலை இனி வேண்டாம். எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திலிருந்து "பூபாளம்" எனும் பெயரில் ஒரு காலாண்டுக் கவிதை இதழ் கொழும்பிலிருந்து வெளிவர தயாராகிறது.

பாரிசில் நடைபெற்ற பாரதி கவிதைப் போட்டியில் சிறப்புப் பரிசைப் பெற்ற கவிஞர் எம். ஏ. எல். அசோமட் ("அல் - அஸூமத்) ஆசிரியராக இருந்து பூபாளத்தை இசைக்கவுள்ளார். இயக்குனஆசிரியராக கவிஞர் "கவின்கமல்" பணியாற்றுவார்.

இச்சஞ்சிகைக்கான கவிதைகள் புல்ஸ்கெப் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டு ஆசிரியர், பூபாளம் பப்ளிகேஷன்ஸ், இல. 530 நீர்கொழும்பு வீதி, மாபாகே, ராகமை என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

## ○ சிறு சஞ்சிகை ஆர்வலர் ○

காவலூர் எஸ். ஜெகநாதன் தரமான சிறு சஞ்சிகைகளுக்கு ஊக்கமளிப்பவர்களில் முதன்மையானவர். அறிமுகக் கூட்டங்களை நடத்தியும் தனது படைப்புக்களை வழங்கியும் பல்வேறு விதத்தில் உற்சாகப்படுத்துவது இலக்கிய உலகம் அறிந்த விடயம்.

ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும் தாமரை, சதங்கை, கணையாழி முதலானவையும், நாம் பேரே கேள்விப்படாத சங்கொலி, குமுறும் நெஞ்சம், நாம்.... என்றெல்லாம் நிறையச் சிற்றேடுகளை அவரது இல்லத்தில் கண்டு வியந்தேன். தமிழ்நாடு மக்கள் இலக்கியக் கழகம் வெளியிடும் தரமான 'மனஓசை' முழு இதழ்களும் அண்மையில் அவருக்கு கிடைத்துள்ளன. ஆர்வமுள்ளவர்கள் ஜெகநாதனை அணுகலாம்.

(வாசகர் வாய்மொழி தொடர்ச்சி......)

## செல்வி ரூபாவிற்கு நன்றி !

'ஏனடா நீ நேற்றைக்கிங்கு வரவில்லை' என்று கண்ணனிடம்தான் கேட்கிறார் பாரதியார். கண்ணன் ஏன் நேற்று வரவில்லை என்று சேவகர்களிடம் கேட்கவில்லை. 'நீ' என கண்ணனை முன்நிறுத்திக் கேட்பதாக அமைந்த பாடலை கவனிக்க வேண்டும்.

'பானையிலே தேளிருந்து பல்லால் கடித்த' தென கண்ணன் பாரதியாருக்கு முன் நின்று சொன்ன பதிலாக அமைகின்றதே யன்றி, சேவகர் சொன்ன பதிலாக அல்ல.

பொதுவாக சேவகர்களில் பொய்ச்சாட்டுதல்கள் இப்படித்தான் இருக்கும் என்ற செல்வி ரூபா ஜோசேப்பின் கூற்று. பொது வழக்குத்தான் மறுக்கவில்லை. ஆனால் பாரதியாரின் கற்பனையில் எழுந்த கேள்வியும் பதிலும், பாரதிக்கும் கண்ணனுக்குமிடையே நிகழ்ந்தனவேயன்றி பாரதிக்கும் சேவகர்களுக்குமிடையே நிகழவில்லை.

எனது கட்டுரையை ஆய்ந்தறிய முயன்ற செல்வி ரூபாவிற்கு நன்றி.

எஸ். பி. கிருஷ்ணன்.

* * *

ஆனி இதழ் கண்டேன். அதில் இடம் பிடித்துள்ள காலபலன் சிந்திக்கவும், சிரிக்கவும் வைக்கின்றது. உண்மையில் அரி அண்ணன் கேள்விக்கு தகுந்த பதில்தான் கொடுக்கின்றார்.

எஸ். ஜீவா — கொக்குவில்.

* * *

பசுத்தோல் போர்த்திய கரடிகள் தலையங்கம் ஒவ்வொரு தமிழனும் கண்ணுற்று சிந்திக்க வேண்டிய அம்சம். கால பலன்கள், அரட்டை வெகு ஜோர். தமிழ்ப்பிரியாவின் கரையைத் தொடாத அலைகள் என் போன்ற அனேக வாசகர்களின் பாராட்டை நிச்சயம் பெறும். கேள்வி பதில் சற்றுசூடாக தாருங்கள்.

தமிழ்பித்தன்
கௌஸா எஸ். பி. சி. — எல்ல

"சுடர்" இதழ் இளம் எழுத்தாளர்களுக்குத்தான் இடம் அளிக்கிறது. அளிக்கவேண்டும் என்பது பலரின் அபிப்பிராயமும் வேண்டுகோளும் ஆகும். அதிலும் பெண் எழுத்தாளர்களுக்கே அதிக வாய்ப்பளிக்கிறது என்பது சில ஆண் எழுத்தாளர்களின் ஆக்ரோஷமான அலறல். இவர்கள் பெயர் பெற்றுவிட்ட எழுத்தாளர்களே இப்படியான ஒரு சிலரால் ஆர்வமாய் எழுதும் என் போன்றவர்களுக்கு இடமில்லை. நிற்க! ஒரு வருடத்தில் ஒரு எழுத்தாளரின் மூன்று சிறு கதைகளுக்கு மேல் சுடரில் இடமளிக்கக் கூடாது.

மேலும், ஏற்கனவே நன்கு அறிமுகமாகிவிட்ட இளம் ஆண், பெண் எழுத்தாளர்களுக்கு அதிக வாய்ப்பளிப்பதை தவிர்த்து என் போன்ற புதியவர்களின் ஆக்கங்களுக்கு வருடத்தில் இரு தடவையாவது வாய்ப்பளிக்க வேண்டும். செய்வீர்களா?

செல்வி. கங்கா - மங்கை
சரசாலை.

* * *

ஆடி மாதச் சுடர் வாசித்தேன் அதில் எல்லாமே சிறப்பாக அமைந்திருந்தது. அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் சகோதரி தமிழ்ப்பிரியாவின் 'கரையைத் தொடாத அலைகள்' அமைந்திருந்தது. அதில் வேலை பார்க்கும் எந்தக்குடும்பப் பெண்ணாலோ மறைக்கவோ, மறுக்கவோ முடியாத உண்மையைக் கூறியிருந்தார். விசேட குறிப்பாக, வேலை பார்க்கும் தாய் தானத்தில் இருக்கும் சில பெண்களுக்கு தன்மேல் 'சின்ன ஆத்திரம் சினப்பாய் மின்னும்' எனக் கூறியிருந்தார். நிச்சயமாக 99.9 வீதமானவர்களுக்கு கோபம் ஏற்படாதென்பதே என் கருத்து.

நான் கூட ஒரு வேலை பார்க்கும் பெண்தான், ஆனால் குடும்பப் பெண்ணல்ல. எனது அம்மா வேலை பார்க்கும் ஒரு குடும்பப் பெண்ணாகத்தான் இருந்தார். ஆனால் ஷியாமியின் துரதிஷ்ட நிலைமை எனக்கு ஏற்படவில்லை. இருந்தும் ஷியாமியின் குடும்பத்தைப்போல் எத்தனையோ குடும்பத்தை நான் கண்டிருக்கின்றேன்.

நெ. சி. புவனா,
முல்லைத்தீவு.

## எலிப்பிரியர் எரிக்லோறல்

எரிக் லோறல் ஓர் ஆஸ்திரேலியர். உலகமெல்லாம் எலியை வெறுக்கும் போது எரிக் மட்டும் எலியைத் தனக்குப் பிடித்த பிராணியாகக் கருதுகிறார். ஆஸ்திரேலியாவில் ஒரு மிருகக்காட்சிச்சாலை வைத்திருக்கிறார் எரிக். இந்த மிருகக்காட்சியில் உலகத்தில் இருக்கும் எல்லா இன எலிகளையும் வைத்திருக்கிறார். தனியாகவே ஒரு எலிப்பண்ணைவைக்கும் திட்டமும் இவரிடம் இருக்கிறது.

— கதிர்மாணிக்கம் —




## மில்க் வைற் பார்சோப்

மில்க் வைற் ஆதரவாளர்கள்
நயமும் பயனும் கருதி
வி. எம். கே. அடையாளமிடப்பட்ட
சிறிய பார் சோப்.
தூய்மைக்கு உத்தரவாதமுள்ளது.
துண்டு துண்டுகளாவும் வெட்டிப்
பாவிக்கலாம்.
நிரம்பிய ஆதாயமுள்ளது
எங்கும் கிடைக்கும்,
வாங்கி ஆதரவளியுங்கள்.

**"மில்க் வைற்" சவர்க்காரத் தொழிலகம்.**

த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7 2 3 3.


## "சுடர்" நண்பர் வட்டம்

சுடர் வட்டம் மூலம் இலக்கிய நண்பர்—நண்பிகளுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசத்தை அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கலாம். தெளிவான விலாசத்துதுடன் தங்கள் பொழுது போக்கு விபரக்குறிப்புகளுடன் அஞ்சலட்டையில் மட்டுமே அனுப்பிவைக்க வேண்டும்.

சுடர் நண்பர் வட்டம்
194ஏ, பண்டாரநாயக்க
மாவத்த,
கொழும்பு — 12.

## 'சுடர்' சந்தா விபரம்

ஆறு திங்கள் — 13-00
ஒரு ஆண்டு — 25-00
(தபாற்செலவு உட்பட)

நிர்வாகி அவர்கட்கு,

இத்துடன் அரை/ஒரு வருட சந்தா தொகையான ரூபா.........க்கான மணி ஓடர்/போஸ்டல் ஓடரை அனுப்புகிறேன். என்னையும் சந்தாதாரராக சேர்த்து...... ... மாதம் முதல் சுடரை அனுப்புமாறு வேண்டுகிறேன்.

முழுப்பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

நிர்வாகி,
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்,
194ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.




இச்சஞ்சிகை 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு—12 இல் உள்ள
இலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.